உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 18 | பிலவங்க ஞூ ஆடித் திங்கஷ் 1ம்வ [17–7–67] | இதழ் 7

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 11)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

இன்சொல்லன் ருழ்நடையன் ஆயினும்ஒன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா — என்சொலினும்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடல்ஞாலம்
பித்துடைய வல்ல பிற.

இனிய சொற்களைச் சொல்வோனுய்ப் பணிவுடையன் ஆயினும் பொருள் சிறிதும் இல்லாதவன் ஆயின், கடல் சூழுலகம் (மக்கள்) அவனெடு கடுஞ்சொற் கொண்டு பேசுவார்

அன்றி இன்சொற் கொண்டு பேசார். யாது சொன்னலும் செல்வம் உடையவனது காலின் கீழ் அமைந்து ஒடுங்கி நடப் பார்கள். அம்மக்களே மயக்க அறிவு உடையவர்கள். மற்றை யன மயக்க அறிவின அல்ல.

உலகத்தில் மக்கள், நற்குண நற்செய்கையிலராயினும் செல்வருக்கு அமைந்து நடப்பார்கள் என்பது கருத்து. இஃது ஒருரை. இது சு. அ. கு. புலவருரையைச் சிறிது மாற்றியெழு துய தென்று தோன்றுகின்றது. அப்புலவர் உரையில் இப் பாட்டின் தலைப்பாகக 'கல்வியறிவின்மை' என்றுள்ளது. பின்னுள்ள பாக்களையும் முனனைய வெண்பாவையும் நோக்கின், இஃது இலம் பாட்டான் கல்வி சீர்ப்பாடில்லை என்றபடி, இன்சொல் தாழ்நடையாம் பண்புகளும் சீர்ப்படாமையைக் குறித்தது எனல் விளங்கும். பதினுருவ்து செய்யுள் முடியக் கல்வி குறித்தவை யாதல் காண்க. அப்புலவர் கொள்கைப்படி கல்வியறிவில்லார் செயலே இவ்விரு வெண்பாவுள்ளும் கூறப்பட்டது அறிக.

''தாழ்நடையன் – பணிந்த வொழுக்கத்தையுடையவன். வன்சொல்லின் அல்லது வாய்திறவா – வன்சொல்லைக் கூறு வதற்கு அன்றிப் பிற சொற்களைக் கூற வாயைத் திறவா. ஞாலம் திறவா. ஞாலம் – உலகத்தில் உள்ள உயிர்கள். ஆகு பெயர். என் சொலினும் எத்தகைய கடுஞ் சொற்களைக் கூறி னும், கைத்துடையான் – (கைப்) பொருளுடையவனது. காற் கீழ் ஒதுங்கும்; அடிமைத்தொழில் செய்வர் என்றபடி. முன்னர்ப் பொருளில்லாதவனை இன்சொலலன், தாழ்நடையன் என்று கூறியவற்றிற்கு மறுதலையாக இங்கே கைத்துடையானுக்கு வன்சொல்லன், மீதூர்ந்த நடையன் ஆயினும் என்பவற்றை வருவித்துப் பொருளுரைக்க. ஞாலமே பித்துடைய, பிற பித்து டைய அல்ல. பிற – பித்துடையனவாகக் கருதப்படும் பிற உயிர்கள்.

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்லமரங்கள் — சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றுன் குறிப்பறிய
மாட்டாதவன் நன்மரம்"

என்றது இங்கே நினைவுக்கு வருகின்றது.''

''இரண்டாவது பொருள்: பித்துடைய அல்ல—நல்ல அறிவுடையனவே; என்றது புகழ்வது போலப் பழித்தபடி. இப்பொருளுக்குப் பிறவென்பதை அசைநிலையாகக் கொள்க.''

'மக்கட்பேறல்லபிற' ; 'ஆகுல நீர பிற' ; 'அணியல்ல மற்றுப்பிற' ; 'ஒப்புரவினல்லபிற'. 'இல்லதனிற்றியபிற' ; 'பகையுமுளவோபிற' ; 'மற்றைய வெல்லாம்பிற' ; என முடியும் பாக்களிற் போலவரும் பிற என்னும் ஈற்றுச்சீர் அசையாக்கப்படுதல் யாண்டும் இல்லை. ஈண்டே முதன் முதற் காணப்படுகின்றது.

''மேயுநிரை முன்னர்க் கோலூன்றி நின்றுயோ
ராயனை யல்லை பிற'' (கலி. 108)

என்புழிப் 'பிற' என்ற ஈற்றுச்சீர் அசையாதல் நூலுரையில் எடுத்துக் காட்டப்பட்டது. ஆண்டும் அசையாக்காது பொருள் கூறலாம்.

'இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு'

என்பது கல்வியொடு தொடர்பில்லாதது. அதனை இங்குக் காட்டியது பொருந்துமோ!

''தொழுமகன் ஆயினும் துற்றுடை யானைப்
பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலர்ந்தால்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப.''

என்னும் (வளையாபதிப்) பாடலும் ஈண்டுக் காட்டற்பாற்றன்று.

'கல்லானே யாயினுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர் கொள்வர் — இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்'

என்பது கல்லாமையும் செல்வமும் கலந்த நிலை கூறியது. அதனால் ஈண்டுக் காட்டல் கூடும்.

''நல்லாவின் கன்றுயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்.''

என்னும் நாலடிச் செய்யுள் ஈண்டுப் பொருந்தும்.

'இன்சொல்லன தாழ் நடையன்' என்ற தொடர் திருக்குறளிற் 'பணிவுடையன் இன்சொலன்' என்றதன் நினைவொடு கருதற்பாலது. 'தாழ்நடையன்' என்றதும 'பணிவுடையன்' என்றதும் ஒரு கருத்தன. இக்காலத்துத் தாழ்ந்த வணக்கம் போல்வதன்று.

'இன்சொல் கேட்பார்க்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் மதுர வார்த்தை. தாழ் நடையாவது எதிர் கொள்வது, இருக்கை விட்டெழுவது, வணங்குவது முதலியன. வன்சொல் – கேட்போர்க்கு வெறுப்பை விளைவிக்குங் கடுஞ்சொல் கடிந்து பேசினும் கைவிடார் என்பது தோன்ற என் சொலினும் என்றார். நல்லதன்பால் நன்மையும் தீயதன்பால் தீமையும் உள்ளவாறு பிரித்துணராமை பற்றிப் பித்துடைய எனவுங் கூறினார்.'

(சு. அ. கு.)

"ஒன்று என்றது எண்ணலளவை யாகுபெயர். அஃது அறத்திற்கும் இன்பத்திற்கும் துணைக்கருவி மாத்திரையாய் நின்ற அச்சிறப்புடைய பொருள்மேல் நின்றது. ஒன்று மில்லானேல் என உம்மை வருவித்துரைப்பாருமுளர்" என்பது புகழுடலில் விளங்கும் வி. கோ. பருதிமாற் கலைஞர் உரை என்று எழுதப்பட்டுளது.

கைத்துடையான்:— 'கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ் செய்மின்' 'ஆக்கமிழந்தேமென்றல்லாவார் ஊக்கம் ஒருவந்தம் கைத்துடையார்' 'மையலொருவன் களித்தற்றாற் பேதைதன் கையொன்றுடைமை பெறின்' என்பவற்றையும் (கைத்து–) 'கைப்பொருளுடையார்' என்றெழுதிய பரிமேலழகருரையையும் ஈண்டு நோக்குக.

"ஞாலம் – பூமி. இங்கே பூமியிலுள்ளோர், ஞாலம் பிறவல்ல என்றுங் கூட்டுக. ஞாலம் பித்துடைய, பிறபித்துடையவல்ல என்று கூட்டியுரைப்பாருமுளர். ஈண்டுப் பித்துடையன யாவை? அல்லன யாவை? என ஆராய்தல் இன்றி இவ்வாறு நிகழும் ஞாலம் எத்தகைய என்றே ஆராயப்புகுந்தாராகலின் அது பொருந்தாது." என ஒரு குறிப்புரை உளது.

(தொடரும்)

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 18. இதழ் 6-ன் தொடர்ச்சி)

இருளும் தரங்கக் கருங்கடன் முகட்டெழும்
இளம்பிறை முயற்குழந்தைக்
கேறவிடு மோடமென வான்மீன் றடந்திரை
எடுத்தெறியு நெடுமீனெனத்
தரளம் பதிந்திட்ட மணிமுறுவ லவரோடு
தருநிழற் செல்வருய்க்கும்
தமனிய விமானமும் வெயிற்கதிர்ப் போர்வையான்
தனியாழி திசையுருட்ட
உருளுங் கொடித்தேரும் வீற்றுவீற் றெழில்புனைந்
தோட்டுபொற் றெப்பமென்ன
உலகேழு மலையெட்டு மொழுகுகதிர் விழுதுவிடும்
ஒண்ணிலாப் புணரிகோப்பத்
திரளும் பளிக்குமா டங்கள்பொலி வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. 84

இநண்ட அலைகளையுடைய பெரிய கடல் முகட்டிலே தோன்றுகின்ற பிறைமதி, அதில் உள்ள முயற்குழந்தைக்கு ஏறும்படி விட்ட ஓடமென்று சொல்லும்படி அமையவும், வானத்திலே உள்ள உடுமீன் கூட்டங்கள் பெரிய அலைகள் எடுத்து வீசுகின்ற நீண்ட மீன்களைப் போலப் பொருந்தவும் முத்துக்கள் பதிந்தாற் போன்ற பற்களையுடைய அழகிய புன்முறுவலை யுடைய தேவமாதர்களுடன் ஐந்தரு நிழலில் வைகும் தேவர்கள்

செலுத்துகின்ற பொன்விமானமும் வெய்யிலாகிய ஒளிப் போர் வையையுடைய சூரியன் ஒப்பற்ற உருளையைக் கிழக்கு மேற் குத்திசைகளில் உருட்ட அதனால் உருளுகின்ற கொடியை யுடைய தேரும் தனித்தனியே அழகு பொலிய பூட்டுகின்ற பொற்றெப்பங்களையும் போலக் காட்சியளிக்க ஏழு உலகங் களிலும் எட்டு மலைகளிலும் வெளிப்படுகின்ற ஒளிக்கதிர்களைப் பாய்ச்சும் ஒள்ளிய நிலா வெள்ளத்தைச் சேர்க்கத் திரண்டிருக் கின்ற பளிங்கு மாடங்கள் பொலிகின்ற வேளூரனே! சிறுபறை முழக்கியருளுவாயாக. தென்றமிழ்க் கலைக்கும் பழைய வட கலைக்கும் தலைவனே! சிறுபறை முழக்கி யருளுவாயாக.

மொய்ம்பிற் பெரும்புவன மொக்கச் சுமக்கின்ற
 மோட்டாமை முதுகுளுக்க
முடவுப் படங்கிழிந் தரவரசி னுயிர
 முடித்தலையு மூளைபொங்கக்
கம்பக் கடாயானை யெட்டும் பிடர்த்தலை
 கழுத்தொடு முரிந்துகவிழக்
கதிர்மணிச் சூட்டுநெட் டரவெட்டும் வடவைக்
 கடுங்கனற் கண்பிதுங்க
அம்பொற் றடம்புரிசை யெழுபெருந் தட்டுருவி
 அண்டகூ டத்தளவலால்
அவரவர் வழங்குதற் கிடுதலைக் கடையென
 அடுக்கேழு நிலையேழுமாம்
செம்பொற் றிருக்கோ புரங்கள்பொலி வேளூர
 சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
 சிறுபறை முழக்கியருளே. 85

வலிமையினாலே பெரிய புவனங்கள் அனைத்தையும் ஒரு சேரத் தாங்குகின்ற ஆமையினது மோட்டு முதுகு அசையவும், அரவரசனாகிய ஆதிசேடனது வளைந்த படங்கள் கிழிந்து ஆயிரம் முடித்தலைகளிலும் மூளைகள் வெளிப்பட்டுச் சிந்தவும், அசைகின்ற மதங்கொண்ட திசையானைகள் எட்டும் கழுத் தோடு பிடர்த்தலைகள் முரிந்து கவிழவும், ஒள்ளிய மணியுள்ள தலையினவாகிய நெடிய எட்டு நாகங்களும் வடவையாகிய

தடிய கனலைப்போல விடத்தைக் கக்குகின்ற கண்கள் பிதுங்கவும், அழகிய பொன்னுலாகிய பெரிய மதில்கள், ஏழு உலகங்களாகிய பெரிய தட்டுக்களைக் கடந்து மேலே சென்று அண்டகூடத்திலே பொருந்துதலால் அவ்வேழுலகங்களிலும் வாழுகின்றவர்கள் சென்று வருதற்கு அமைக்கப்பட்ட வாயில்களைப் போல ஏழு அடுக்குகளும் ஏழு நிலைகளும் பொருந்திய செம்பொன்னலாகிய அழகிய கோபுரங்கள் பொலிகின்ற வேளூரனே! சிறுபறை முழக்கியருளுவாயாக. தென்றமிழ்க் கலைக்கும் பழய வடகலைக்கும் தலைவனே! சிறுபறை முழக்கி யருளுவாயாக.

தரிக்குஞ் சுடர்ப்பருதி முழுமதிக் கடவுளொடு
தடமதில் கடந்தகநகர்
சாரவரி தாற்புவன கோடிகட் கொளிசெயச்
சதுமுகன் கற்பந்தொறும்
விரிக்கின்ற விருசுடரு மொருவழித் தொக்கென
வியன்கதிர்ப் படலமூடி
வீங்கிருள் விழுங்குசெம் மணிமாட நிரையுமொளி
விளைபசுங் கதிர்வெண்புரி
புரிக்குஞ் செழுந்தரள மாடமும் வெயிலினெடு
பொழிநிலாப் போர்ப்பமுற்றும்
போதுதெரி யாமையிற் குமுதமொடு சதவிதழ்ப்
போதுமே யிருபோதையும்
தெரிக்குந் தடம்பணை யுடுத்ததமிழ் வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. 86

ஒளியைத் தாங்கியிருக்கின்ற சூரியன், முழுமதிக் கடவுளுடன், உயர்ந்த மதிலைக்கடந்து நகருக்குள் செல்ல முடியாமையால் புவன கோடிகளுக்கு ஒளி செய்வதற்காகக் கற்பங்கள் தோறும் நான்முகன் படைக்கின்ற சூரிய சந்திரர்களாகிய இரண்டு சுடர்களும் ஒருவழியிற் சேர்ந்தாற் போல மேலான ஒளிப்படலத்தை விரித்துப் பெருகி வரும் இருளை விழுங்குகின்ற செம்மணிகள் பதிந்த மாடவரிசையும், ஒளியை விளைக்கின்ற பசிய வெண்கதிர்களாகிய கயிறுகள் கட்டப்பெற்ற செழுமையான முத்துக்கள் பதிந்த மாடமும் வெய்யிலுடன் பொழிகின்ற நிலாவைப் பரப்ப முழுவதும் இராப் பகற் பொழுதுக்கள் தெரியாமையினால் குமுதமலர்களும் நூறிதழ்த் தாமரைப் பூக்களுமே

அள்விருபொழுதுகளைத், தெரியச் செய்கின்ற அகன்ற வயல்கள் சூழ்ந்த தமிழ் வழங்குகின்ற வேளூரனே! சிறுபறை முழக்கி யருளுவாயாக. தென்றமிழ்க்கலைக்கும் பழைய வடகலைக்கும் தலைவனே! சிறுபறை முழக்கியருளுவாயாக.

மழைமுகில் பிளிறு முழக்கென விரிசிறை
மடமயி லினமகவ
மால்கட லோலிடு மொலியென விரக
மடந்தையர் மனநெகிழப்
பழமறை யார்ப்பென வாகுதி வேட்டெழு
பண்ணவ ருண்மகிழப்
பரநா தத்தொலி யெனவநு பூதி
பலித்தவர் நெக்குருக
அழலவிர் சோதியெ மைய னடஞ்செய
ஆயிர மங்கையினோர்
அண்ண றுவைத்திடு குடமுழ வொடுசுடர்
ஆழி யவன்கொட்டு
முழவென வமரரு முனிவரு மார்ப்ப
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரு திருப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. 87

மழைமேகம் முழங்குகின்ற ஒலியென்று இளைய மயிலி னங்கள் அகவவும், பெரிய கடல் ஓலமிடுகின்ற ஒலியென்று தலைவரைப் பிரிந்த விரக நோயுடைய பெண்கள் உள்ளம் நெகி ழவும் பழய வேதங்களின் ஒலியென்று வேள்வியில் ஆகுதியை விரும்பி யெழுகின்ற தேவர்கள் மனமகிழவும், பரநாதவொலி யென்று ஞான அநுபவம் முற்றியவர்கள் நெஞ்சு நெக்குருக வும், தீ வண்ணச் செஞ்சோதியாகிய எமது சிவபெருமான் திரு நடம்புரிய ஆயிரங் கைகளையுடைய ஒப்பற்ற வாணசுரன் முழக்குகின்ற குடமுழவோடு, ஒளியையுடைய சக்கரப் படை யினனாகிய திருமால் முழக்குகின்ற முழவென்று தேவர்களும் முனிவர்களும் ஆரவாரிக்கவும் சிறுபறையை முழக்கியருளு வாயாக. முத்தமிழும் பயிலுகின்ற பருதித் தலத்தில் எழுந்தருளி யுள்ள முருகப்பெருமானே! சிறுபறையை முழக்கி யருளுவாயாக.

(தொடரும்)

What is Pranayama?

Sri Swami Sivananda

"Tasmin Sati Svasaprasvasayor-gativicchedah Pranayamah"—"Regulation of breath or the control of Prana is the stoppage of inhalation and exhalation, which follows after securing that steadiness of posture or seat." This is the definition of Pranayama in the Yogasutras of Patanjali.

'Svasa' means inspiratory breath. 'Prasvasa' means expiratory breath. You can take up the practice of Pranayama after you have gained steadiness in your Asana (seat). If you can sit for 3 hours in one Asana, continuously at one stretch, you have gained mastery over the Asana. If you are able to sit from half to one hour even, you can take up the pratice of Pranayama. You can hardly make any spiritual progress without the practice of Pranayama.

Prana is Vyashti (microcosmic), when the individual is concerned. The sum-total of the cosmic energy or Prana is Hiranyagarbha who is known as the floating "Golden Egg." Hiranyagarbha is Samashti (macrocosmic) Prana. One match stick is Vyashti (single). The whole match box is Samashti. A single mango-tree is Vyashti. The whole mango grove is Samashti. The energy in the body is Prana, By controlling the motion of the lungs or respiratory organs, we can control the Prana that is vibrating inside. By control of Prana, the mind can be easily

---

The above article is reproduced with the kind permission of the Editor of 'The Divine Life.'

controlled, because the mind is fastened to the Prana, like the bird to the string. Just as the bird that is tied to a post by a string, after flying here and there, finds its resting place in the post, so also this mind-bird after running hither and thither in various sensual objects, finds its resting place during deep sleep in the Prana.

The Bhagavadgita says: "Others offer Prana (outgoing breath) in Apana (incoming breath) and Apana in Prana. restraining the passage of Prana and Apana, absorbed in Pranayama." Pranayama is a precious Yajna (sacrifice). Some practise the kind of Pranayama called Puraka (filling in). Some practise the kind of Pranayama called Rechaka (emptying). Some are engaged in the practice of Pranayama called Kumbhaka (retention) by impeding the outward passage of air, through the nostrils and the mouth, and by impeding the inward passage of the air, in the opposite direction.

According to Sri Sankaracharya, "Pranayama is the control of all life-forces by realising naught but Brahman in all things. The negation of the universe is the outgoing breath. The thought, 'I am Brahman' itself is called the incoming breath. The permanence of that thought thereafter is the restrained breath. This is the Pranayama of the wise, while the pressing of the nose is only for the unknowing."

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. டா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

மலர் 18, இதழ் 6-ன் தொடர்ச்சி

The Lord is the Beginning and the End
இறைவனே ஆதியும் அந்தமுமாய்நிற்கும்

152. ஆதிப்பிரானுலகேழும் அளந்தவன்
ஓதக்கடலும் உயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி
ஆதிக்கட் டெய்வமும் அந்தமுமாமே.

The Primal Lord Spanned the worlds seven
He standeth as the sea and the myriad life below,
And the ParaSakti pervadeth all
In Union that no separateness knoweth
Verily God is the Beginning and End of All.

முழுமுதலாம் இறைவன் ஏழுலகையுமளந்தவன். ஒலிக்கும் கடலும் உயிர்களுமாய் நிற்பவன்; அவனோடு வேறுபாடில்லாது பராசத்தி கலந்து நின்றனள். அவளே தெய்வம்; ஆதியும் அந்தமும்.

The Path of Siva leadeth to Bliss. Here and Hereafter
சிவநெறியே இம்மையும் அம்மையும் வழங்கும்நெறி

153. ஆய்ந்தறிவார்கள் அமரர் வித்தியாதரர்
ஆய்ந்தறியா வண்ணம் நின்ற; அரனெறி
ஆய்ந்தறிந்தேனவன் சேவடி கைதொழ
ஆய்ந்தறிந்தேனிம்மை அம்மை கண்டேனே.

The immortal Beings, Devas and Vidyadaras,
Sought Him after, but knew Him not;
But I pursuing the proven path of Siva

I reached His Feet of Grace to adore
And so realised the bliss of Here and Hereafter.

தேவர்கள், வித்தாயதரர்கள் போன்றவர்களெல்லாம் இறைவனைத் தேடி நின்றார்கள்; கண்டாரில்லை. நான் சிவநெறி நின்று தேடினேன். அவன் சேவடி கைதொழும் பேறு பெற்றேன். இம்மை அம்மைப் பயனை எய்தினேன்.

Macrocosm in the microcosm a mystery

பிண்டத்துள் அண்டம்பதிந்தது அறியவொண்ணாதது

154. அறிய வொண்ணாதவ் வுடம்பின் பயனை
அறிய வொண்ணாத அறுவகை யாக்கி
அறிய வொண்ணாத அறுவகைக் கோசத்
தறிய வொண்ணாததோர் அண்டம் பதிந்ததே

Baffling indeed is the mystery of Life's Goal
Baffling is it why into the six systems it was made;
A baffling mystery indeed
How into the shedding sheaths of body's macrocosm
Got imprinted a veritable microcosm.

உடம் பெடுத்ததன் பயன் அறியவொண்ணாத தாயுள்ளது. அதனைக் காணவந்த நெறிகளை ஆறாகப்பகுத்ததன் விவரமும் அறியமுடியாத தாயுள்ளது. காண முடியாது கழன்றுபடும் கோசங்களாலாகிய உடம்பில் பேரண்டமே பதிந்த இரகசியமும் அறிய முடியாததாக அமைந்துள்ளது.

ஐந்தாந்தந்திரம் முற்றிற்று.
Fifth Tantra Finis

உத்தமர்தம் உறவு வேண்டும்!

திரு. எ. மாணிக்கம் அவர்கள்,
"முருக நிலையம்"
வி சூ ர்.

முருகா! கருணைக் கடலே! அந்தமில் அரசே! செந்தில் குமரா! அன்பர் மனத்துறையும் ஆண்டவா! அன்பின் வடிவமே! அருட் பெருஞ் சோதி! ஆருயிர்த் துணையே! ஆராவமுதே! பேரானந்தப் பெருங் கடலே! பிறப்பறுக்கும் பெருமானே! வானவர் போற்றும் வள்ளலே! தேனமுதாகிய தித்திக்குந் தீந்தமிழே! தேவாதி தேவா! திருவருணைக் கோபுரத்தினின்றும் வீழ்ந்த அருணகிரியாரை ஆட்கொண்டஐயனே!முப்பத்து முக்கோடித் தேவர்களும் முடிசாய்த்து வணங்கும் முதல்வா! செந்தமிழ்த் திலகமே! சிவனார் தம் திருவே!

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே."

என்ற ஒப்பாரிலாத அப்பர் பெருமானுக்கு 'அஞ்சேல்' என்று அருள் சுரந்தூட்டிய, கண்ணுதலான் ஈன்ற கற்பகமே! வேதம் நான்கினும் மெய்ப் பொருள் ஆனவா! வினை தீர்க்கும் வேலவா! குன்று தோறாடும் குமரா! கந்தா! கடம்பா! கதிர் வடிவேலா! கருணாகரா! கார்த்திக் கேயா! கண்ணின் மணியே! கலியுகத்தும் வரதா! விண்ணவரைச் சிறை மீட்ட அண்ணலே! எண்ணுதற் கரிய வண்ணக் கொழுந்தே!

இன்பத்தின் எல்லையே! ஏழிசைப் பயனே! அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே! சிவசங்கரா! சிலம்பா! தேசிகா! பாலசுப்பிரமணியா! கோல மயில் வீரா! சூர்ப்பகைவா! சரவண பவா! குன்றெறிந்தோனே! குகா! சண்முகா! மூன்றுங்கு தோளா! முக்கண்ணி மைந்தா!

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!"

அரிமருகா! திருமுருகா! வேல் முருகா! வாகுலேயா! வள்ளி மணவாளா! பாபசங்காரா! மன்னுயிர் அனைத்தும் போற்றும் மாதவா! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பவா! செம்மை நல்கும் சிவகுருநாதா! மும் மல மறுக்கும் மூர்த்தியே!

சிவஞானச் செழுஞ்சுடரே! "மாற்றறியாத செழும் பசும் பொன்னே! மாணிக்கமே. சுடர் வண்ணக் கொழுந்தே"! "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர் தருவே! தருநிழலே! நிழல் கனிந்த கனியே! ஓடையிலே யூறு கின்ற தீஞ்சுவைத் தண்ணீரே! உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே! மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே! மென்காற்றில் விளைசுகமே! சுகத்திலுறும் பயனே!" இகபர இன்பம் ஈந்திடும் முருகா!

"மன்னயனை அன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
மந்திரம் உரைத்த குருவே!"

"மயிலேறி விளையாடு குகனே புல்வயல்நீடு, மலைமேவு குமரேசனே" என்றெல்லாம், நின் சொல்லரிய தொல்புகழை அல்லும், பகலும் அறுபது நாழியும் சொல்லா நிற்கின்ற, உன் பெருமைகளை யெல்லாம் மனமுருகப் பாடிப் பணிகின்ற,

"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்."

முருகா! அருளுடையரசே! அப்படியல்லாமல் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் திரிகின்றவர்களின் உறவு கல வாமை வேண்டும். ஐயனே! ஏனென்றால்,

"நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்."

ஆகையினாலே நாயினும் கீழேன தீயினத்தின் பேயாட்டங்களில் சிக்கி மாய்ந்து போவேனேயல்லாமல், தெய்வநின் அருள் பெற்று, உய்ய வழிகற்று உயரமாட்டேன். மேலும்,

"நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும்; மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு."

எனவே அஞ்சுகிறேன். இதனுற்றான், எமது முன்னோர்களும்,

"தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி."

என்றார்கள் போலும். இளைய வேல் முருகா! "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார் திருவள்ளுவர். மேலும் "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்." என்றபடி எனக்கு இப்பிறவியில் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பாங்குறப் பிறக்க அருள் செய்தாய். பிறந்தேன். வளர்ந்தேன். கல்வி பயின்றேன். கற்றதனால் ஆயபயன் நின் திருவடியைப் பற்றுவதன்றி வேறு யாதுளது? வீணே உண்ணுவதற்கும், உறங்குவதற்கும், எதையாவது உளறித் திரிவதற்குமா இப்பிறவி எனக்களித்தாய். ஈசா! நின பொன்னார் திருமேனியைக் கண்ணாரக்கண்டு களிக்கவும், என் கரங்களால் நாளும் நன் மலரெடுத்து நின் மின்னார் பொன் மேனியில் சாத்தி வணங்கவும், உன் பெருமைமிகு திருநாமங்களை என்னுளும் என்நாவால் இசைக்கவும், நின் திருக்கோயில் வலம் வந்து "முருகா முருகா" என்று உருகா நற்சிந்தையுடன் ஆனந்தக கூத்தாடி நிற்கவும அல்லவோ இவ்வரிய பிறவியை எனக்களித்தாய், இறைவா! பாங்கான பரம்பொருளே!

இப்பாருலகில் எப்பாலவரும் தப்பாமல் ஈடேற்றமடைய வந்தவதரித்த அப்பர் பெருமான், "தலையே நீ வணங்காய்", "கண்காள் காண்மினகளோ", "செவிகாள் கேண்மின்களோ", "மூக்கே நீ முரலாய்", "வாயே வாழ்த்துகண்டாய்", "நெஞ்சே நீ நினையாய்", "கைகாள் கூப்பித தொழீர்", என்றெல்லாம் பாடிப் பரவி, பேரானந்த முற்று ஆராக் காதலுடன் அவனியோர்க்கு வழிகாட்டிச் சென்றிருந்தும், பாவியேன் தீயவர்கள் பாற் சிக்கிக், "கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்கி விட்டேன்". என் அறியாமையினால் இதுவரையும் இருந்து விட்டேன், முருகா!

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்பதையும் மறந்தேன். மேலும்,

"பெரியவர் கேண்மை பிறைபோல, நாளும்
வரிசை வரிசையா நந்தும் — " வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே, சிறியார் தொடர்பு." (நாலடியார்)

என்பதையும், "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை, எஞ்ஞான்றும் குருத்திற் கரும்புதின் றற்றே." என்பதையும் இதுகாறும் ஏற்றேனில்லை. முருகா! "இளம்பரிதி நூருயிரங்கோடி போல, வளந்தரு தெய்வீக வடிவே! உளந்தனிற் கண்டு ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின், மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே! ஓதியஐந்து ஓங்காரத்துள்ளொலிக்கும் உள்ளொலியாய் ஐந்தொழிற்கும், நீங்காத பேருருவாய் நின்றோனே! முருகா!எவ்வேளையும்வந்து இடர்தீர்க்கும் செவ்வேளே! "வாடிமனநொந்து தமிழ் சொன்ன நக்கீரன்முன், வந்துதவி செய்த முருகா!" என்னுருயிரே! "வண்டடர் கடப்பமலர் மாலிகாபரணமணி, மார்பனே அருளாளனே!" "மன்அயிலும் இனிய செஞ்சேவலுஞ் செங்கைமலர், வைத்த சரவண பூபனே!" "வயிரமொடு சூரனைச் சங்காரமே செய்து, வானவர்க் குதவு தலைவா!" "மாம்பழந் தனைவேண்டி அந்நாளில் ஈசனை, வலமாக வந்த முருகா!

"சிறியார் உணர்ச்சியுள் இல்லை; பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு."

ஆகையினாலே அல்லும் பகலும் அகமுருகி உன் எல்லையில்லாத் திரு நாமங்களைச் சொல்லி மகிழ்கின்ற, உன்னை வாயார வாழ்த்தி வணங்குகின்ற, நற்பெரியோர்களின் தொடர்பை, "உத்தமர்தம் உறவை" இச்சிறியேன் நாளும் பெற்று உய்ய, "பச்சைமயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும் - கச்சைத் திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா(று), அருள் விழியும் மாமுகங்கள் ஆறும், — விரிகிரணம், சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும், எந்தத் திசையும் எதிர்தோன்ற; வந்து" அருள் புரிய வேண்டும்,

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

அன்பு

திரு. புலவர். திருமேனி நாகராசன் அவர்கள்,
தமிழாசிரியர்,
காரைக்கால்.

முன்னுரை:-

அன்பாவது உலகில் உள்ள உயிர்கள் மாட்டு இயல்பாக எழுகின்ற மனப்பற்றுதம். அன்பு, காதல், பக்தி என்பன ஒரு பொருட் கிளவி. இதயமுள்ள மாந்தனிடம் அன்பு குடிகொள்கிறது. அன்பை ஒரு கட்டு எனக் கூறினும் பொருந்தும். என்னை, வெவ்வேறு நாட்டினரையும், ஊரினரையும், மொழியினரையும், மதத்தினரையும், சாதிஇனரையும், நிறத்தினரையும் ஒரு சேரப் பிணிப்பது அன்பெனும் தளையே என்க.

அன்பிலார் தன்மை

இவ்விழுமிய அன்பு இல்லாதவர் மாந்தராகார். அன்பு என்னும் அமிழ்தைக் கொள்ளும் கலந்தான் இதயம். ஆதலால் அக்கொள் கலமாகிய இதயமில்லாதார் அன்பெனும் அமிழ்தைப் பெறுதவரே. அன்பின்மையால் அதன் பயனாகிய அருளும் இல்லாதவராவார்; அருளின்மையால் பிற உயிர்கள் மாட்டு இரக்கங் கொள்ளார; பிற உயிர் மாட்டுக் கலங்கா அவரை உலகம் வெறுக்கும்.

அன்பிலார் தமக்கே கொள்ளும் விதம்

அன்பிலார் புன்மை வேட்டுவர்; செய்ந்நன்றி மறப்பர்; நடுவு நிலை பொய்ப்பர்; அடக்கம் இன்றித திரிவர்; வெஃகுவர்; புறங்கூறுவர்; தீவினைசெய்வர்; யாவையும் தாமே கொள்ள

(முன் பக்கத்தொடர்ச்சி)

முருகா!

''காடும் மலையும் கடலும் உருளச்,
சாடும் தனிவேல் உடையாய் சரணம்!
ஆடும் மயில்வேல் அரசே சரணம்!
பாடும் வரதற் பரனே சரணம்!''

(கந்தரனுபூதி)

வேண்டுமென எண்ணுவர், உலகே தம்முடைமை என்பர்; மறந்தும் சிறு துரும்பும் பிறர்க்குக் கொடார்.

எடுத்துக்காட்டு

இளவெளிமான் என்பான் புறப்பாட்டிலே காணப்படுகின்றான். இவன் வெளிமான் என்பானுக்குத் தம்பி ஆவான். வெளிமான் மாரிநிகர் வண்கையன். இளவெளிமான் ஈத்து உவக்கும் இன்பம் அறியா இழிசனன். ஒருகால், புலவப் பெருந்தகைப் பெருஞ்சித்திரனார் வெளிமானை நாடிச் சென்றபோது அவன் துஞ்சுவானாகத் தம்பியாகிய இவனைப் பரிசில் கொடுவெனப் பணிக்க இவன் புலவரின்மாட்டு அன்பும் இரக்கமும் இன்றி முகம் மாறுபட்டுச் சிறிது பொருளைப் பரிசலாக அவர்க்குக்கொடுக்க முனைந்தான்.

அன்பிலார் அடையும் சிறுமை

பேராச் சிறப்பின பெருஞ்சித்திரனார், இளவெளிமான் கொடுதத அற்பப் பொருளைக் கையினால் தீண்டினாரல்லர். அன்பில்லாதவர்கள் எவ்வளவு செல்வம் உடையவர்களாக இருப்பினும் அவர்களைப் புலவர்பெருமான தூசென மதித்தார். பெருஞ்சிததிரனார் இளவெளிமானை இகழ்ந்துரைத்தார்; அவன் புலவர்களைப் புரப்பவன் அல்லன என்று வசைபாடினார். என்னை,

"இரவலர் புரவலனை நீயு மல்லை
புரவல ரிலவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே."

என்னும் புறப்பாட்டான் அறிக. புலவர் பழித்த இளவெளிமானை இன்றும் கற்றோர் தூற்றுகின்றனர். இலக்கியத்துள் விரவி வரும் அவன் பெயரை நல்லர் நவில நடுங்குவர். எனவே அன்பிலார் யாவராலும் விரும்பப் படாராய், மதிப்பற்றுப் பீழித்து நைதல் கண்கூடு.

அன்புடையார் தன்மை

யாவரையும் ஒரு சேரப் பிணிக்கும் அன்புடையார் உயர்ந்த

வராவார்; அருள் நிரம்பப் பெற்றவராவார்; இரக்கமுடையவரா வார். அவர் தூய்மையான நெஞ்சு உடையவர்; எல்லா உயிரின் மாட்டும் விழுமிய பற்றுடையவர்; தமக்கென வாழாது பிறர்க் கென வாழ்பவா. புகழின் பொருட்டு உயிரையும் கொடுப்பவர்; பழி என்றுல் உலகமே பெறினும் கொள்ளாதவர்.

அன்புடையார் யாவர்க்கும் பயன்படும் விதம்

அன்புடையார் தம்மிடத்து அணுகியவரை என்றுங் காப் பர். எதன் பொருட்டும் சிறிதும் அஞ்சார். உடல், பொருள், ஆவி, அனைத்தும் பிறர்க்குக் கொடுப்பர். தமக்கென்று ஒன்றை யும் வைத்துக் கொள்ளார். எல்லாவற்றையும் எல்லார்க்கும் கொடுப்பார். அவர் பயன்மரம் உள்ளூர்ப் பழுததது-போல்வர்.

எடுத்துக் காட்டு

சிபி என்பான் சிறப்பான சோழவரசன். அவன் அன்பே உருவானவன். அன்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாய்ப் பழந் தமிழ் இலக்கியங்களில் ஒளிர்பவன். அவன் ஒருநாள் பூஞ் சோலையில் உலாவிக் கொண்டிருந்தபோது கழுகினுல் துரத்து வரப்பட்ட குறுகிய நடையை உடைய சிறிய புருவானது அவனை அடைக்கலங் கொள்ள அவன் அப்புறவின் மாட்டு அன்பு கொண்டு கழுகிற்குத் தன்னையே கொடுத்தான்.

அன்புடையார் அடையும் பெருமை

அன்பின் பொருட்டுத் துலாக் கோல் ஏறினன் சிபிச் சோழன். புறவின் மாட்டு அவன் கொண்ட அன்புதான் அருள்தான்—இரக்கந்தான் அவனை எதனையும் தூசென எண்ண வைத்தது. புறவின் மீது அவன் கொண்ட அன்பே அவனை நிறை கோலில் நிற்க வைத்தது. அவனது புகழும் மக்கள் இதயமாகிய நிறைகோலில் நிறுக்கப்படுகிறது. அன்புள்ளத் தால் உயர்ந்த சிபியை

"நிலமிசை வாழ்ந ரலமர றீர
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்

தன்னம் புக்க குறுநடைப் புறவின்
தபதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன்''

எனப் புறமும், ''எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'' எனச் சிலம்பும், ''உடல் கலக்கறவரிந்து தசை யிட்டுமொருவ னொருதுலைப் புறவொ டொக்கநிறை புக்கபுகழும'' எனப் பரணியும், ''இவர் குலத்தோன் மேற் பறவை மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாருக வழங்கினனுல்'' என இராமக்காதையும் பிறவும் புகழ்ந்து உரைத்தமை காண்க. இன்றெல்லாப் புலவரும் அன்புடைமைக்கு எடுத்துக் காட்டாய்ச் சிபிச் சோழனையே குறிப்பர். அவன் பெயர் கூறல் தமக்கு இன்பமெனக் கொள்வர். கற்றில்லா மக்களும் சிபியைப் புகழ்ந்துரைப்பதை இயல்பாய்க் காணலாம்.

முடிவுரை

எனவே, இதுகாறும் கூறியவாற்ருன் அன்பு, அன்பிலார் தன்மை, அன்பிலார் தமக்கே கொள்ளும் விதம், அன்பிலாத இளவெளிமானின் புன்செயல், அவன அடைந்த சிறுமை, அன்புடையார் தன்மை, அன்புடையார் யாவர்க்கும் பயன்படும் விதம், அன்பேவடிவான சிபிச்சோழனின அருஞ்செயல், அவன் அடைந்த பெருமை ஆகியவை ஒரு சிறிது விளக்கப்பட்டன என்க.

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–25 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 3–00 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	6 ஷிலிங் அல்லது ரூ. 4–00 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

முருகா முத்தந் தருக!

வித்துவான், திரு. ச. கிருஷ்ணராஜா அவர்கள்,
புதுவை

செந்தூர்வாழ் கந்தப் பெருமானைச் சிந்தையிற் கொண்டு வாழ்ந்தோர் பலர்; வாழ்கின்றோர் மிகப் பலர்; மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல் அவன் மெய்யருள் பெற்றுய்ய விரும்பிப் பாடிய புலவர்களும் பலராவர். அமிழ்தத் தமிழுக்கு அகங் குழையும் அப் பெருமான் தானே விரும்பிச் சிலரைப் பணி கொண்டான். அவர்களுள் ஒருவர் புலவர்; பகழிக் கூத்தர் என்னும் பெயரினர்.

பகழிக் கூத்தர் சேது மன்னர் ஆட்சிக்குட் பட்டிருந்த செம்பிய நாட்டைச் சேர்ந்தவர்; மண்ணளந்த மாயனை மனத்துட் கொண்டு வாழ்ந்த வைணவ அந்தணர்.

திருமாலைப் பாடும் பகழிக் கூத்தரிடமிருந்து பாவான் அமைந்த ஒரு மாலையைப் பெறப் பன்னிரு கையன் விரும்பினான். முன்னாளில் சமண மதத் தலைவராய் விளங்கிய தரும சேனரைத் தடுத்தாட் கொள்ளத் தந்தையார் மேற்கொண்ட முறையைத் திருவுளத்துட் கொண்டான்; கொடிய வயிற்றுநோய் கூத்தரைப் பற்றியது. புலவர் சொல்லொணாத் துயருற்றுத் துடித்தார். மந்திரமும் தந்திரமும் மருந்தும் பயனற்றுப் போயின.

ஒருநாள் இரவில் நம் செந்தில்மேய வள்ளி மணாளன் புலவர் கனவில் தோன்றி இலைத் திருநீற்றுடன் ஏடொன்றைத் தந்து மறைந்தான். விழித்தெழுந்த புலவர் தலையணை மீதிருந்த இலைத்திரு நீற்றையும் ஏட்டையும் கண்டு வியந்தார். அன்பு மிக்கு அகங் குழைந்து மெய்யரும்பி அத்திரு நீற்றை எடுத்து மேனியில் பூசிக் கொண்டார். வாட்டிய வயிற்று நோய் ஓட்ட மெடுத்தது.

உடனே புலவர் எல்லையற்ற மகிழ்வுடன் ஏட்டை எடுத்துப் பார்த்தார்.

"பூமாது போற்றும் புகழ்பகழிக் கூத்தாஉன்
பாமாலை கேட்கயாம் பற்றேமா — ஏமம்
கொடுக்க அறியேமா! கூற்றுவன் வாராமல்
தடுக்க அறியேமா தாம்"

என்ற வெண்பா அதில் எழுதப் பெற்றிருந்தது.

கந்தப் பெருமானின் செந்தமிழ்ப் பாவைப் பன்முறை படித்தார். கோழியைப் பாடும் வாயால் குஞ்சைப் பாடேன் என்று கூறியவரிடம் முட்டையைப் பற்றிய பாடல் வரச்செய்த முருகப் பெருமானது வேட்கையை நிறைவேற்ற முனைந்தார். அவன் மேல் ஓர் அரிய பாமாலையைச் சூட்டி மகிழ்ந்தார். அது திருச் செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் என்ற பெயருடன் திகழ்வ தாயிற்று. பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்றுள்ள அப்பனுவற்கண் விளங்கும் சுவைமிக்க பாக்களுள் ஒன்று வருமாறு

"கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்தும் கரட விகடதடத்
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியும் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே"

இது முத்தப்பருவ முதற்பா பன்னிருகைப் பெருமானைப் பதின்ேராந் திங்களெய்திய பச்சிளங்குழந்தையாகப் பாவித்துப் பகழிக் கூத்தர் முத்தந் தருமாறு அழைக்கிறார். பாட்டின் பொருள் அறிந்து அழைப்பின்கண் அமைந்துள்ள அழகைக் காண்போம்.

ஒலிக்கின்ற அலைகள் எடுத்துஎறிதலால் நிறைந்த சூலுற்ற வலம்புரிச் சங்குகள் வருத்தமுற்றுக் கரையில் தவழ்ந்து மணல் மேட்டின் கண் உகுத்த முத்திற்கு விலையுண்டு. தாவிப்பாயும் மதநீரும் மாறுபடும் மணமும் உடைய பெரிய யானைகளின் பிறைபோல் வளைந்த தந்தத்தின்கண் விளையும் முத்திற்கும் விலையுண்டு; தழைத்து அடிப்புறம் வளைந்த கதிர்களைச் சுமந்த பசிய நெற்பயிர் தரும் குளிர்ந்த முத்திற்கும் விலையுண்டு; மேகந்தரும் முத்தினுக்கும் விலைகூறும் நிலையுண்டு. ஆனால் கொவ்வைப்பழம் போன்ற உன் வாய் தரும் முத்திற்கோ விலையில்லை. அதனால் முருகா முத்தந் தருக. முத்துக்களைச் சொறியும் கடலையடுத்த திருச்சீர் அலைவாய் என்னும் திருப்பதிக்குத் தலைவனே முத்தந்தருக.

இது பாட்டின் பொருள்:— இனி அது நாட்டும் நயத்தைக் காண்போம். நான்காம் அடியில் வந்துள்ள முத்தம் என்ற சொல்லும் விலையில்லை என்ற சொற்றொடரும் இரு பொருள்பட நின்று பாட்டிற்கு உயிரூட்டுகின்றன. முத்தம் என்ற சொல் வாய் முத்தத்தினையும், ஒன்பான் மணிகளுள் ஒன்றான முத்தினையும் குறித்து நிற்கின்றது. விலையில்லை என்பதற்கு விலையின்றிப் பெறக்கூடியது என்ற பொருள் கொண்டால் பாட்டின் கருத்து வருமாறு:—

வலம்புரிச் சங்குகள் கான்ற மணிக்கும், யானைத் தந்தங்களில் விளையும் தரளத்திற்கும், பசுஞ்சாலியின் குளிர் முத்திற்கும், கொண்டல் தரும் நித்திலத்திற்கும் விலையுண்டு. அவற்றிற்குரிய விலையை வணிகர் வரையறுப்பர். பெரும் பொருள் பெற்றவரே அவற்றைப் பெறுந் தகுதி பெறுவர், ஆனால் உன் முத்தமோ விலையின்றிப் பெறக் கூடியது. எனவே எளியேனுக்கு உன் முத்தம் தா; அப்படித் தருவதால் உனக்கும் இழப்பில்லை.

விலையில்லாத பொருளைத் தாராளமாக வழங்குதல் உலகியல் அன்றோ?

இனி விலையில்லை என்பதற்கு விலையாகத் தரக் கூடிய பெரும் பொருள் இவ்வுலகவில்லை என்ற பொருள் கொண்டு நோக்கினால் கவியின் சிறப்பும், கனிவாய் முத்தத்தின் சிறப்பும் மிகும். முதலில் குறித்த நான்கு வகைப்பட்ட முத்துக்களுக்கும் ஈடாக வேறு பொருள்களைத் தரக்கூடும். முருகப் பெருமானின் முத்தத்திற்கோ எப்பொருளும் ஈடாகா அதற்கு விலையாக ஈரேழ் உலகைத் தரினும் ஒவ்வாதென்க. முத்துக்கள் இருபது இடங்களில் விளையும் என்று புலவர் கூறுவர் இதனை.

"தந்தி வராகம் மருப்பு இப்பி பூகம் தனிக்கதலி
நந்து சலஞ்சலம் மீன்தலை கொக்கு நளின மின்னார்
கந்தரம் சாலி கழைக்கன்னல் ஆவின் பல் கண் செவிகார்
இந்து உடும்பு கராமுத்தம் ஈனும் இருபதுமே."

இங்கு ஆராய எடுத்துக் கொண்ட பாட்டின் கண் பகழிக் கூத்தர் நான்கிடங்களைக் குறித்துள்ளார். சங்கு ஈன்ற முத்துக்கள் நெய்தல் நிலத்திலும், யானைத்தந்தத்தில் விளையும் முத்துக்கள் குறிஞ்சி நிலத்திலும், சாலி வழங்கும் முத்துக்கள் மருத நிலத்திலும், கொண்டல் தரும் முத்துக்கள் முல்லை நிலத்திலும் சிறப்பாகக் கிடைப்பன. நெய்தல், குறிஞ்சி, மருதம், முல்லை ஆகிய நான்கு பகுப்புக்களுள் உலகின் எப்பகுதியும் அடங்கும். நான்கு நிலத்தின் தோன்றும் நான்கு வகை முத்துக்களைக் கூறவே முத்துக்கள் அனைத்தையும் கூறியவரும்.

மணி, தரளம், முத்து, நித்திலம் ஆகிய சொற்களைக் கவிஞர் நயம்படக் கையாண்டுள்ளார். அவற்றுள் மணி என்ற சொல், கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் ஆகியவற்றைக் குறிக்கும் பொதுச் சொல்லாம்; தரளம், முத்து, நித்திலம் என்பவை ஒரு பொருட் சொற்கள்.

முருகா! உன் திருப்பதியில் இடையராது ஒலித்துக் கொண்டிருக்கின்ற கடல் தனது அலைக் கைகளால் இவ்வுலக வாழ்க்கைக்குப் பயன் தரும் முத்துக்களை வாரி வாரி இறைக்கின்றது.

அம் முத்துக்களை பெற அடியேன் விரும்பவில்லை ஏழையேன் வீட்டுலக வாழ்வை விரும்புகின்றேன் ஆதலின் உன் கனிவாய் முத்தத்தையே விரும்புகின்றேன். என்ற குறிப்புடன் முத்தம் சொரியும் கடல் அலைவாய் முதல்வா முத்தந் தருகவே என்று கூறியுள்ளார்.

இதுவரை பகழிக் கூத்தர் முருகப் பெருமானது பன்னிரு செவியும் மாரப் பாடிய பக்திப் பனுவலாகிய பன்மணிப் பேழையி லிருந்து ஒரு முத்தை எடுத்து அதன் அழகை ஒருவாறு கண் டோம். மற்ற மணிகளின் எழிலையும் கண்டு அன்பர்கள் இன் புறுவார்களாக.

அறிவிப்பு

சிவாகம நெறித் திருமண முறை

தொகுப்பு

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி)

தேவகோட்டை

திருமணம் என்பது முற்பிறவித் தொடர்புபற்றி நிகழ்வது. திருமண முறை சிவாகம நெறிப்படி பத்ததிகளில் முறையாகக் கூறப்பெற்றிருப்பதையும், அவைகளைக் கடைப்பிடிக்கும் உரிமை யையும், கடமையும் யாவரும் உடையவர்கள் என்பதையும், ஆசிரியர் அவர்கள், இனிய எளிய தமிழில் கோர்வையாகவும் பூர்ணமாகவும் தொகுத்துயிருக்கிருர்கள். கையடக்க அளவில் 15 பக்கங்களைக் கொண்ட அருமையான பதிப்பு.

புத்தகம் வேண்டுவோர்

0-15 Np. அஞ்சல்தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்,
(தத்புருஷ தேசிகர்)
பாலருவாயர் நிலையம், சம்பந்தர் தெரு,
தேவகோட்டை,

பேரின்ப வாழ்வு

திரு. மா. கோபால்கிருஷ்ணன் அவர்கள்,
ஆசிரியர், விசூர் கிராமம்.

பரவை சூழ்ந்த பாரின்கண்ணே இயற்கை அன்னை இன்னுருவங்கள் கொண்டு எழில் நடம்புரியும் பகுதிகள் எண்ணில. வானுர ஓங்கி மலைமுடியில் மஞ்சு தவழும் அழகும், வளமார்ந்த பழமரங்களின் செழுமையும், தெள்ளிய நீர் வெள்ளிய அருவியாய் வீழும் கண்கவர் காட்சியும், பூத்துக் குலுங்கும் சோலைகளும், மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் அவற்றுள் சில. இவ்வித அழகுச் செல்வங்கள் நிறைந்து சிறந்து விளங்குவது நம்நாடு.

> "உறுபசியும் ஓவாப்பிணியும் செறு பகையும்
> சேராது இயல்வது நாடு"

என்றபடி பாதுகாக்கப்படும் நம் நாடானது தெய்வ பக்தியிலேயும், அறநெறியிலேயும் சாலச் சிறந்து விளங்குவதாகும். மேலும் மூன்று என்ற எண்ணிக்கையிலே பற்றுடையதாகவும் விளங்கும். எவ்வாறு எனில் "மூவுலகும் தொழு தேவி," என்ற சரஸ்வதியைப் புகழ் பாமாலையானும், மூவுலகை ஈரடியால் அளந்து மகாபலிச் சக்கரவர்த்தியின் சரிதத்தை மண்ணுலகுக்கு விளக்கியுள்ள வரலாற்றானும்,

> "சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
> கோசலையைத் தொழுது நோக்கிக்
> கொற்றத்தார்க் குரிசில் "இவர் ஆர்" என்று
> குகன் வினவக் "கோக்கள் வைகும்
> முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகும்
> ஈன்றானை முன் ஈன்றாளைப்
> பெற்றத்தால் பெருஞ்செல்வம் யான்பிறத்த
> லால் துறந்த பெரியாள்" என்றான்.

என்று பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகப் படுத்தும் கம்பராமாயணப் பாடலாலும் மேலுலகம், பூவுலகம், பாதளம் என்ற மூன்று உலகங்கள் உண்டு என்பதை அறியலாம்.

அம் மூன்று உலகங்களையும் அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகள் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்கிறார்கள் என்றும். அம்மூவரில் முழுமுதற் கடவுளாம் சிவனுக்கு மூன்று கண்கள் உண்டு என்றும் அறிகிறோம். மாதொரு பாகனுக்கு மூன்று கண்கள் உண்டு என்பதை "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" — என்று கூறிய சங்கம் காத்த மதுரைத் தலைமைத் தமிழ்ப் புலவராம் நக்கீரர் வாக்காலும், "கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி" என்ற மணிவாசகப் பெருமானின் மணிமொழியினாலும், "சடைமருங்கில் இளம்பிறையும், தனிவிழிக்கும் திருநுதலும்" என்ற மனுநீதி புராண வரலாற்றாலும்,

"முக்கண்ணன் என்று அரனைமுன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ளது அரைக்கண்ணே — மிக்க
உமையாள் கண்ணொன்றரை மற்று ஊன்வேடன் கண்ஒன்று
அமையும் இதனால் என்றறி

என்ற காளமேகப் புலவர் வாய்மொழியினாலும் அறியலாம்.

இச் சிறப்புக்களெல்லாம் பெற்ற சிவன் முதலான மும்மூர்த்திகளால் ஆளப்படும் நாடு மூன்று பங்கு நீரால் சூழப்பட்டது. தமிழ் என்ற மூன்றெழுத்தைக் கொண்ட இனிமையான மொழியை முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களால் மூன்று முடியுடை வேந்தர்கள் காத்தனர். முச்சங்கங்கள் மூலம் முதலிடம் பெற்ற தமிழ் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாக முதலிடம் பெற்றது. முத்தமிழின் முதல் நூலாம் திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்கள் இடம் பெற்றதால் முப்பால் எனப்பட்டது. முத்தமிழும், முக்கனியும், முப்பாலும் என்றும் பெருமை தருவதாகும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் விட்டு அன்பு, அறம், அருள் இவற்றைப் பெற "பக்தி" என்ற மூவெழுத்து "மனம்" எனும் மூவெழுத்தாகிய உளத்தில் பதிய வேண்டும்.

மனதில் பதிய வேண்டுமானல் பதியப்படும் பொருள் மனதிற்கு வலி உண்டாக்காமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட தன்மை மென்மையான பொருளுக்கே உண்டு. மென்மையான அப்பொருள் ''மலர்''என்ற மூன்றெழுத்துப் பதமே ஆகும்.

''மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து''

என்ற குறளினால் மலரின் மென்மைத் தன்மையை அறியலாம். எனவே தான் அடியவர்களின் உள்ளங்களிலே நன்கு பதியும் வண்ணமும், அத் தொண்டர்களுக்கு யாதொரு இன்னலும் ஏற்படா வண்ணமும் மிக அழகாக இறைவன் திருவடிகளை மலருக்கு ஒப்பிட்டு அம் மலரடியை மனதில் நினைத்து இறைவன் திருவருள் பெற்று உய்ய

''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்

என்று இராமலிங்க அடிகளார் இறைவனின் திருவடிகளை மலருக்குச் சமமாக கூறினர். இதிகாசங்கள் இரண்டுள் ஒன்றும் பாரதத்திலே வில்லிபுத்தூர் ஆழ்வார் அவர்கள், கண்ணன் மாறுவேடம் கொண்டு கன்னனைக் காணச் சென்று ''வேண்டுக யாவும் தருகுவேன் நீரும் வேண்டிய வேண்டுக'' என்ன அதற்குப் பாண்டுவின் திருமாமகன் கூறியதைச் செவி இன்புறக் கேட்ட காட்சியை

''மைத்துனன் உரைத்த வாய்மை கேட்டு
ஐயன் மனமலர் உகந்து உகந்து அவனைக்
கைத்தல மலரால் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணை நீராட்டி''

என்று கடவுளின் திருக்கோல உருவத்தை மலருக்கு ஒப்பிட்டும் கம்பர் தமது இராமாயணத்திலே இராமர் முடி சூடிக் கொள்ள இருந்த முகபாவத்தையும் முடியிழந்து நாடுதுறந்து காட்டிற்குச் செல்லும் போது இருந்த தோற்றத்தையும் தாமரை மலருக்கு ஒப்பிட்டுக் கூறும் காட்சி இன்பம் பயப்பதாகும்.

''சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்''.

என்பது அவர் வாக்கு.

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்து ஆயிரம் இராமர் புகழைத் தன் புகழ் ஆக்கிக் கொண்ட பரதனைக் குகன் தழுவினான். தாமரைச் செங்கணானைத் தழுவினுன். சேவடிக் கமலப் பூவில் கைகளைப் பூட்டிக் கொண்டான். இவ்வாறு ஆண்டவனின திருவுருவக் கோலத்தை மலருக்கு ஒப்பிட்டு பாடியுள்ளனர். மலரின் மெல்லிய தன்மையாய் விளங்கி அம்மலரின் மேலேய விற்றிருக்கும் இறைவனை எண்ணி, இறைஞ்சி வாழ்ந்தால் நாம் இப் பூவுலகில் நீண்ட நாட்கள் வாழலாம் எனபதைத் தமிழ் மறை தந்த பெரும்புலவர்

''மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

என்று கூறியுள்ளார். எனவே "எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்ச", சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நிற்கப், பிறந்த பிறப்பு அறுக்கக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி, நன்னெறிக் குய்ய ''நமசிவாய'' என்ற நாதன் நாமத்தை நவின்றுப் ''பேரின்ப வாழ்வு'' வாழ எல்லோரும் இன்புற்று இருக்க இறைவனை இறைஞ்சுவோமாக.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 3 – 00 * வெளிநாடு ரூ. 4 – 00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்,
தருமபுரம், மாயூரம் P. O.

"அறிவார் இல்லை"!

பாலகவி வயிநாகரம்
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
(தத்புருஷ தேசிகர்), தேவகோட்டை.
(மலர் 18, இதழ் 6-ன் தொடர்ச்சி)

நல்லவர்களிற் சிறந்தவர்கள் குழந்தைகள். குழந்தைப் பருவம், மாசு படியாதது. பட்ச பாதம் பற்றாதது. விருப்பு வெறுப்புக்களில் அழுந்தாதது. இத்தகைய சேயை விட நல்லவன் சிவன் என்று சொல்லி அவன் நமக்குச் செய்வன அனைத்தும் மாசு நீங்கியதும், பட்சபாதத்தால் அமையாததும், விருப்பு வெறுப்புகளுக்கு உட்படாததும் ஆகும் என்பதை இங்கே ஆசிரியர் உணர்த்தியருளுகின்றார்.

மக்களில் இறைவனிடத்து அன்பு செய்கின்றவர் ஒருவகையினர். இறைவனோடு எவ்வகையிலும் தொடர்பில்லாதவரென்று தம்மை எண்ணிக் கொண்டு ஒதுங்கி வாழ்பவர் மற்றொரு வகையினர். இவ்விருவரது நற்பேற்றிலும் இறைவனுக்கு ஏற்றத் தாழ்வில்லாத ஒரே படித்தான இசைவையே இருக்கும். என்றாலும் மெய்யன்பர்களுக்கு உதவி செய்வதில் மிக மிக அண்மையாளனாகவும், மற்றவர்களுக்கு உதவுவதில் அவர்களது நிலைகளுக்கேற்பச் சேய்மையாளனாகவும் அவன் இருப்பான். இதனை "நல் அன்பர்க்கு அணியன்" என்பதனால் உணரவைத்தார்.

உலகில் 'தாயன்புக்கு இணையானது வேறொன்றுமில்லை' என்பதை நாமறிவோம். ஆனால் ஒரு பிறப்பில் ஒழிந்து போகின்ற உடலின் தொடர்பு பற்றி உண்டாகின்ற தாயன்பை நோக்க எல்லாப் பிறப்புகளிலும் பிறப்பு நீங்கிய பின்னரும் நிலையாயிருக்கும் உயிரின் தொடர்பு பற்றி உண்டாகும் இறையன்பு எவ்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

'திருக்கோயில்' ஆசிரியர் அனுமதி பெற்று இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

அருள்

வித்துவான். திரு. த. கு. பத்மநாபன் அவர்கள்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
நாயகன்பேட்டை.

அருளாவது யாது? எல்லா உயிர்களிடத்தும் கருணையோடு நடந்து கொள்வதும், எவ்விதத் தொடர்புமின்றி இயற்கையாகவே எல்லா உயிர்களிடத்தும் தாமாக நிகழும் இரக்கமுமே அருளாகும்.

அருள் என்பது அன்பின் முதிர்ச்சி! அவ்வன்பாவது யாது? தொடர்புடைய மனைவி மக்கள் உற்றூர் உறவினர் மாட்டுத் தோன்றும் இரக்கத்திற்கு 'அன்பு' என்று பெயர். அதே பரிவை, பாசத்தை, இரக்கத்தை, கருணையை எல்லா மனிதர்களுக்கும், மற்றெல்லா உயிருள்ள பிராணிகளுக்கும் காட்டுகிற போதுதான் 'அருள்' அங்கே அழுந்திக் கிடக்கிறது. அன்பு விரிந்துதான் அருளாகின்றது. இல்லறத்தில் அன்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தால் அதுவே சாலச் சிறந்ததாகும். ஆனால் துறவறம் மேற்கொள்ள துணிபவர்களுக்கு அடிப்படை அருள் ஒன்றேயாகும்.

'தன்னைத் திருத்திக்கொண்டபின் ஊரைத்திருத்த முயற்சி செய்? என்பது ஆன்றோர் வாக்கு! 'மற்றவர் விழியில் இருக்கும் துரும்பை எடுக்குமுன் உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக்

(முன் பக்கத்தொடர்ச்சி)

வளவு மேலானதென்பது ஊன்றிச் சிந்திப்பவர்களுக்கல்லாமல் மற்றவர்களுக்கு எங்ஙனம் விளங்கும்? தவந்தரும் ஞானத்தோர்கள் உணரும் தாயினும் நல்ல இறைவன் தன்மையைப் பாடலின் இறுதிப் பகுதியில் காண்கின்றோம்.

கவனி', என்ருர் சிறுமதிகொண்டோரால் சிலுவையிலறைபட்ட இயேசு பிரான். அதுபோன்று தமிழினம், தமிழ் மக்கள் தனித்திருந்து வெற்றிக்கொடி நாட்டி வையம் புகழ வாழ்ந்து அகத்தியம் படைத்து, ஒல்காப் பெருமை தொல்காப்பியம் தந்து, இலக்கியமும் இலக்கணமும் இவ்வுலகிற்கு உவந்தளித்து பெருமையுடன் வாழ்ந்த,வாழ்கின்ற தமிழ் முதுமக்களின் உதிரத்தில் உதித்துவிட்ட நாம் அருளுடையராகாதிருந்தால் பிற இனத்தார் எங்ஙனம் அருளுடையராதல் கூடும்?

'வளநிதி படைத்தோம், வடிவஇல் உடையோம், அளவில் சேய் ஈன்ருேம், அனுபவத்து அமைந்தோம், இளமையிற் சிறந்தோம், எழில் நலம் உடையோம்' என்று எக்காளமிட்டுத் தன் நினேவே பெருநினேவாக தருக்கிக் கிடப்பதை விடுத்து அருளின் தன்மையை அறிய வேண்டும்.

இவ்வுலகில் பிறந்து விட்ட மனிதர் அனேவரும் செய்து வரும் முயற்சிகளெல்லாம் அல்லலினின்று விடுபடுதற்கேயன்றி வேறெதற்கு? வறிஞர் முதல் வசதி படைத்தவர் ஈருகவுள்ள எல்லா மக்களும், 'அல்லலினின்று ஆண்டவன் நம்மை எப்போது விடுவிப்பார்? அதிலிருந்து நீங்கப் பெற்ருலன்றி நாம் நலமடைதல் இயலாதே' என்று எண்ணி எண்ணி எங்கிப் பெருமூச்சு விட்டு வருந்திக் கொண்டிருக்கின்றனர். ஏன் இந்நிலே பிறந்தது? இந்நிலே மாற வழி கிடையாதா?

உண்டு! உள்ளம் இருந்தால் வழி தானகத் திறக்கும். மனிதன், என்று அருளுடையவனுக ஆகின்ருனே அன்றே அவன் அல்லல்கள் நீங்கும்! அவனேத் தொடர்ந்த துன்பங்கள் தொலேயும். இஃதன்றிப் பிறவற்ருல் நீங்கும் எனப் பிதற்றிக் கொண்டிருப்பது பேதமையேயன்றி வேறன்று!

இப்பிறப்பில் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமுமின்றி, பஞ்சைகளாய்ப் பராரிகளாய், நெஞ்சைப் பிழியும் பரிதாபத்துக் குரியவர்களாய் அலேந்து திரியும் மக்களே அனுதினமும் காண்கிருேம். இவற்றுக்கு யாது காரணம்? உன்னிப் பார்த்தோமா? அவர்களின் உண்மை நிலே உணர்ந்தோமா? அறிவு சான்ற அறிஞர்கள் செப்புகிருர்கள். 'அச் செருக்கர்கள் உயிர்களிடத்துச் செய்ய வேண்டும் அருளேத தவிர்ந்து,

அளவிலாக் கொடுமைகளைச் செய்து ஒழுகினவர்கள்.' என்று! அவர்கள் திருந்த, நன்னிலை எய்த வழியே வகுக்க வில்லையா? நன்னெறியாளர்கள்? என்று விடுக்கும் வினவுக்குத் தாயுமான வர் தக்க விளக்கம் தந்துள்ளாரே!

'தமக்குண்டாகும் தீங்கைச் சிறிதும் எண்ணமல், பிற உயிர்க்கு ஒரு துன்பம் நேர்ந்தாலும், அதற்கு உள்ளம் உருகி, உணர்ச்சி பெருகி, கண்ணீர் வடித்து, அத்துயரை நீக்க விரை வார்களேயானல் மேனிலை எய்தலாம்' என்பது அவர் வாக்கு!

பல்லுயிரும் பலவுலகும் இறைவன் படைத்தது எதற்காக? ஒன்றுக் கொன்று பயனுடையன வாயிருக்க வேண்டும் என்னும் பேரிரக்கத்தாலேயே பல்வேறு விதமான உயிரினங்களைப்படைத் திருக்கின்றான்! அவற்றினிடத்து வெறுப்பைக் காட்டலாமா? வேதனை கொடுக்கலாமா? வெட்ட நினைக்கலாமா?

பிறர் துன்புற்றிருக்க தான் மட்டும் இனிது வாழ விரும்ப வில்லை. தமிழ் நெஞ்சம்! ஏதிலான் துயரத்தையும், தன் துயரம் என்றெண்ணி அத்துயர் துடைக்கத் துள்ளி எழுந்தது தமிழ் நெஞ்சம். ஒரு குறும் புறவின் பொருட்டுத் தன் உடம்பினைப் பொருளென் றெண்ணது கொய்து கொடுத்து பெரும் புகழ் பெற்றான் சிபிச் சக்கரவர்த்தி! 'முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும்', எல்லைநீர் ஞாலத்து எவரீந்தார் தண்ணருளால்? பாரியும் பேகனும் தானே! தமிழ் நெஞ்சறிவுடையோர் சிந்திக்க வேண்டும் அருள் நெஞ்சத்தின் அழியாப் பெரும் புகழை!

அருளில்லாதவர்க்கு வீட்டுலகத்து இன்பமும், பொருளில் லாதவர்க்கு கூட்டுடலுலகத்து இன்பமும் இல்லை' என்பது பொய்யில் புலவன் வாக்கு! இம்மை இன்பத்துக்குப் பொருள் உதவுகின்ற தென்றால் அம்மை இன்பத்துக்கு அருள் உதவு கிறது! அன்புத்தாய் ஈன்ற அருங்குழவியே அருள். செல்வம் என்னும் செவிலித்தாயே அருளாம் குழவியைப் பேணி வளர்க் கின்றாள்.

அருள் வளர்ந்து பக்குவப்பட்டு பருவம் அடையும் வரை, அவள் குணத்தைக் கைக்கொண்டு வழுவாமல், ஒழுகுகின்றவர் களிடத்தில் எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாம் தில்லைக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

சேக்கிழார் வைணவரா?

'முத்தமிழ்' ஆசிரியர்,

திரு. பண்டித நடேசனார் அவர்கள், B. A., J. P.,

கௌரவ மாகாண நீதிபதி, சென்னை. – 7

[*11—6—67* மாலை *6–30* மணிக்குச் சேக்கிழார் திருநட்சத்திரத் தன்று சென்னை, திருவேட்டீஸ்வரர் ஆலயத்தில் முதல் கடவையாகச் சேக்கிழாரை யானைமேலேற்றிப் பவனி விழா நடத்தினர் மக்கள். அவ்வமயம் "சேக்கிழாரவையில்" மகாமகோபத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் பேரர், ஸ்ரீ. க. சுப்பிரமணிய ஐயரும், சைவப் பெரியார், திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளையும், கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியாரும் சென்னை அரசாங்க முன்னாள் செயலாளர், திருவாளர் நல். முருகேச முதலியாரும்" சேக்கிழாரைப் பற்றிப் பேசினர்; அன்றைய தலைமையுரை இது]

ஆதி குமரகுருபர சுவாமிகளும் துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகளும் சைவத்துக்கு இரு கண்கள் எனலாம். அவர்கள் பிறக்கவில்லையெனில் சைவத்தின் சாத்திரங்கள் மக்களுக்கு விளங்கி இரா. "சிறப்புடை பொருளைப் பிற்படக் கிளத்தல்" என்பது தொல் காப்பிய விதி. அதற்கேற்ப சேக்கிழார் பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை

(முன் பக்கத்தொடர்ச்சி)

கூத்தன் அம்மையப்பனின் பேருளானது நிறைந்து, ததும்பி வழியும். அருள்வழி கொண்டோரை நோய் நாடாது! கவலை இருள் கப்பாது! துன்பம் தொடராது! அனைத்திருளும் மறைந்து, ஆண்டவனின் அருள் பார்வை கிட்டும்! அதனாலேதான் வள்ளுவப் பெருந்தகை,

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லையிருள் சேர்ந்த
இன்னா வுலகம் புகல்"

என்கிறார்.

யாயது. ஆசிரியாரும் தெய்வச் சேக்கிழாரானார். இவரைச் சிவனார் கண்களில் நெற்றிக் கண்ணுக்கு ஒப்பிடலாம். மேனோக்கிய கண் உலகைத் திருத்துமல்லவா? அவ்வுலகம் பதினான்கு எனக் காட்டவே இறைவனும் "உலகெலாம்" என்று அடியெடுத்துச் சேக்கிழார்க்குக் கொடுத்தார்; அஃது நன்குணர்ந்த ஆசிரியரும் தம் புராணத்தில் பதினான்கு இடங்களில் "உலகெலாம்" என வைத்துப் பாடினார். தலை, இடை, கடைகளில் 'உலகெலாம்' எனலும் போற்றற்குரியதே.

சேக்கிழார் காலத்துக்கு முன்னர் தொண்டநாடு (தொண்டைநாடு அன்று) குறும்பரால் இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இன்றும் அக்கோட்டங்கள் உள; பெயரே சிதைந்துள்ளன. அக் கோட்டங்களில் ஒன்று புலியூர்க் கோட்டம்; இப்புலியூர் கோட்டத்தைச் சார்ந்ததே குன்ற வளநாடு; அந் நாட்டின் தலைநகரே குன்றத்தூர். குன்றத்தூரில் இன்று சிதைந்துள்ள சிவன் கோயிலில் உள்ள சிவலிங்கத்துக்குக் "கந்தழி" ஈஸ்வரர் எனப்பெயர். கந்தழி எனும் பதமே தொல்காப்பியர் காலத்தது எனலாம். எனவே, மிகத் தொன்மையுடையது குன்றத்தூர் ஆகும்.

குன்றத்தூரிலும் கரிகாற் சோழனால் குடியேற்றப்பட்ட நாற்பத்து எண்ணாயிரவரில் சிலர் வாழ்ந்தனர். அவர்கள் யாவரும் உழுதுண்போர் ஆவர். உழுவித்துண்போரினம் பின்னர் ஏற்பட்டதாகும். நிலவளம் நீர்வளம் நெல்வளம் பெருக்கவே கரிகாற்சோழன் துளுவ நாட்டிலிருந்து சைவ வேளாளர்களைக் குடியேற்றினான். வேளாளர் உபகாரிகள் அல்லவா? பழையனூர் வேளாளரில் கூழாண்டார் கோத்திரம், மழவிடையார் கோத்திரம், பிச்சாண்டார் கோத்திரம், வில்வராயர் கோத்திரம் எனப்பலர் சைவர்களாகவே உள்ளார். தாங்கள் பயிரிட்டறுத்த நெல்லை நடராஜாவுக்குரிய நைவேத்தியத்துக்குக் கொடுத்துவிட்டுத் தாங்கள் புன்செய் பயிரை உண்டனர் என்பதைக் குறிப்பதே "கூழாண்டார்" கோத்திரம் என்பது. [அடியேன் "எழுபது" வேளிர் தீப்பாய்ந்த மண்டபத்தையும் சாட்சி புரீஸ்வரர் கோயிலையும் கட்டியபோது இவ்வுண்மைகளையறிந்தேன்.] வைணவர்கள் யாரும் இன்றும் இப்பெருங்குடியில் இல்லை,

இன்றும் குன்றத்தூர் பழையனூர் அவையத்தார் சைவர்களே மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள். சேக்கிழாரைப் பழையனூர் வேளாளர் மரபினைச் சார்ந்தவர் என்றே தாம்பாடிய 'சேக்கிழார் பிள்ளைத்தமிழில்' குறிக்கின்றார்.

இத்தகைய சைவ வேளாளர் குலத்தில் "சேக்கிழான்" கோத்திரத்தில் தோன்றிய திருவாளர் வெள்ளியங்கிரி முதலியார்க்கும் அழகாம்பிகையார்க்கும் தவப்புதல்வராகப் பிறந்தவரே பெரியபுராணம் பாடிய தெய்வச் சேக்கிழார். "சேவூர்க் கிழார்', "சேயூர் கிழார்" என்பன 'சேக்கிழார்' என மருவிற்று எனலாம்; ஆனால் பொருந்தாது. வட ஆற்காட்டைச்சார்ந்த ஆரணி (ஆறணி) ஜாகீரைச்சார்ந்து 'சேவூர்' எனும் கிராமம் உண்டு; செய்யூர் என்பதே சேயூர்; சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் என்று ஒரு நூல் உண்டு. இவ்வூர் சூனும்பேட்டையை அடுத்துள்ளது. இவ்வூர்களுக்கும் சேக்கிழார்க்கும் தொடர்பே இல்லை. சே = இரிஷபம்; கிழார் = உரியார்; காளை மாடுகளை உழவுக்காக உரிமையுடையார் எனும் பொருள்படினும் தரும சொருபமாகிய இரிஷபத்தைத் தம் வாகனமாக உரிமையுடைய சிவனையே குறிக்கும். சிவகோத்திரமுடைய இனமே "சேக்கிழார்" எனப்பட்டார். சிவனைத்தள்ளி வேறு எண்ணாத வேளாளர் வேறு கோத்திரம் பெறுவரோ?

கோவூர் கிழார், துடிசைக்கிழார், மேலூர்கிழார், புரிசைக் கிழார், கூடற்கிழார், வெண்குளப்பாக்கிழார் என்பன போன்று சேக்கிழார் குலமும் ஆகும். இக்கிழார் யாவரும் சைவரே. மதுரையில் அமாத்தியர்குலம் என்று ஒன்று இருந்ததுபோல் தொண்ட நாட்டிலும் சேக்கிழார் குலம் விளங்கியது. அரச குலமும் மந்திரி குலமும் முறையே தமிழ் நாட்டின் அரசனையும் அமைச்சனையும் தந்தன. சேக்கிழார் மரபினர் சோழகுல மன்னர்களுக்கு மந்திரிமாராகவே இருந்தனர். முதல் குலோத்துங்கன் காலத்துப் பிறந்தார் சேக்கிழார்; இரண்டாம் குலோத்துங்கனுக்கு முதல் மந்திரியானார். எருதுகொண்டு வயல் வேலை செய்யும் வேளிர் குலத்துத் தோன்றினும் கல்வி கேள்விகளில் வல்லுநரானதால் சேக்கிழார் எனும் இராமதேவன் அமைச்சுத் தொழிலை மேற்கொண்டார்.

"ஐயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவளநாடான புலியூர் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராம தேவன் என்ற உத்தம சோழப் பல்லவராயன்" என்பது திருமழபாடிக் கல்வெட்டில் காண்பது; இதன் காலம் கி. பி. 1162.

இக்கல்வெட்டிற் கண்ட "சேக்கிழான் இராமதேவனே" பெரியபுராணம் பாடியவர் என்பதில் ஐயமில்லை. இவர் தம்பியே "சேக்கிழான் பாலருவாயர்" (சம்பந்தர்). "இராமதேவர்" என்பது சேக்கிழாரின் பிள்ளைத் திருநாமம்; அருண்மொழி என்பது சேக்கிழாரின் காரணப்பெயர்; தொண்டர்சீர் பரவுவார் உத்தம சோழ பல்லவராயர் போன்றதே-அருண்மொழி என்பது. அருள்மலிந்த திருத்தொண்டர் புராணம் பாடிய பின்னர் பெற்றவை "அருண்மொழித்தேவர்", மாதேவனடிகள் (மாதேவடிகள்) என்பன. ராஜபக்தியால் பெற்றோர் சேக்கிழார்க்குப் பிள்ளைத் திருநாமமாக "அருண்மொழி" (ராஜ ராஜ சோழன் I) எனும் பெயர் சூட்டினர் எனல் பொருந்தாது. நாடு மொழியால் பெயர்பெற்றதே ஒழிய சாதாரண மனிதன் மொழிப்பேர் இடப்பட்டவருகப் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் (சேக்கிழார் காலம்) காணப்படவில்லை. "குன்றைமுனி சேக்கிழார்", "அருந்தவத்தனில் இருந்தவர்", அருண்மொழித்தேவர்", "தெய்வச் சேக்கிழார்", "உத்தம சோழ பல்லவராயர்", "தொண்டர்சீர் பரவுவார்" என்பன பிற்காலக் கல்வெட்டுகளிற் காண்பனவாம்.

சேக்கிழாரின் பிள்ளைத்திருநாமம் "இராமதேவன்" என்பதால் தூய சைவவேளாளராகிய சேக்கிழாரை வைணவர் என ஆராய்ச்சியாளர் கூறுதல் பிழையாம். இராவணனை "இலங்கேசுரன்," "வீணைக்கொடியோன்" என அழைப்பதுண்டு. இராவணன் பூசித்த இடமே இராவணேசுரம்; ஈச்சுரம் = சிவன்கோயில். அங்குள்ள சிவனே இராவணேசுரன். இந்த இராவணேசுரம் இன்று இராமேசுரமாக மாறிவிட்டது. காரணம்; சிவபத்தனுகிய இராவணனைக் கொன்றதால் இராமனுக்குப் பழி பிறந்தது. அப்பழி நீங்கவே சிவபூஜை செய்தான். அவன் பூசித்த சிவலிங்கமே

இராமநாதன் என்றும் இராமலிங்கம் என்றும் இராம தேவர் என்றும் பெயர் பெற்றது. "இராமனுகியநாதன்" எனப் பொரு ளாக்கின் இருபெயரொட்டு பண்புத்தொகையாம்; "இராமனுக்கு நாதன்" என நான்காம் வேற்றுமைத் தொகையாக்கலே ஏற் புடைத்து; அதுவே தக்க பொருளாம். இராமநாதன் என்பது சிவனையே குறிக்கும்; இராமனுக்குத்தேவர் என்பது சிவனைக் குறிக்காதோ? சிவனது காரணப் பெயரே "இராமதேவர்" என் பதற்கு யாதொரு ஐயமுமில்லை. எனவே, சேக்கிழார்க்கிட்ட திருப்பெயர் சைவப் பெயராகிய இராமதேவரே.

சேக்கிழாரின் பிள்ளைத் திருநாமம் வைணவப் பெயரே எனக்காட்ட சிவனடியார்களாகிய" புருஷோத்தமநம்பி"யையும் "நரசிங்க முனையரை"யும் எடுத்துக் காட்டுகின்றனர் சிலர். இவ்விரண்டும் சிவனுர் நாமங்களே ஆகும். ஸ்ரீ ராமபிரானைப் புருஷோத்தமன் என்பர் வைணவர்; ஆடவரில் சிறந்தவன் நம்பி எனப்படுவான். புருஷோத்தமனுக்கும் சிறந்தவன் சிவனே. இல்லெனில் இராமன் சிவபூஜை செய்யான். நரசிங்கமூர்த் திக்கும் போரில் அரைசன் சிவனே. நரசிங்கத்தையடக்கியவன் சிவனன்றோ. பதங்களுக்குள்ள உண்மையை அறிவதே ஆராய்ச் சிக் கழுகு! "சேக்கிழான் பாலறுவாயர்" என்று சேக்கிழாரின் தம்பிக்குப் பேரிருக்க வெள்ளியங்கிரி முதலியார் தம் மூத்த மக னுக்கு வைணவப் பெயர் வைப்பாரா என்பது நல்லவினு, இராமேசுரத்திலுள்ள சிவனது நாமமாகிய 'இராமதேவர்,'எனும் பெயரையே அவரது தவத்தால் பிறந்தவர்க்கும் இட்டார் என் பதே அறிவுடைமை. ஞானசம்பந்தரின் திருப்பெயர்களில் ஒன்று 'பாலறுவாயர்' அல்லவா? இன்றும் திரு இராமேச்சுரத்தில் இருப்பவன் இராமன் பூசித்த மாதேவன் தானே.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 18. இதழ் 6-ன் தொடர்ச்சி]

IV

MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

81. கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடி
 கெடினு
நள்ளே னினதடி யாரொடல் லானர கம்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறி
 னிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்
 தமனே.

81. Indra or Vishnu or Brahm,
 Their divine bliss crave not I;
I seek the love of Thy saints,
 Though my house perish thereby.
To the worst hell I will go,
 So but Thy grace be with me.
Best of all, how could my heart
 Think of a god beside Thee?

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press.)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

ஆசைப்பத்து

இனி, ஆசைப் பத்தாவன:

பொழிப்பனுபூதி உரையாவன:— முற்பதிகத்தில் அருளிய சிவானந்தச்செருக்கில் பற்றற்றலே பரமென்று கூறப்பெற்றது; அவை பெறுமாறு திருவருளாசைப் பெருக்கம் இங்குக் கூறப் பெறுகிறது. அதனுண்மை, உடலுயிர் அருளாய் ஒழிந்து, மலமும் அடைவே அருளாய தன்மை பெற்று அதற்கிடையூறி லாமை பூசனையும் நேசமும் போற்றுதல். அன்பும் திடமாய்ப் புலப்பட வேண்டும். அடியார் அநுபவம் அதுவாய்ப்போவதே முடிவு; ஆதலால் அக்கருணை வியப்பைக் கலந்தருளியதெனக் காண்க.

திருப்பா, ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதிய தெனக்காண்க.

416. இனி, திருவடிக்காசை யுற்றமையைக் கூறும் (தி. – ன.) :—

கருடக் கொடியோன் காண மாட்டாக் கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! கருடக்கொடியுடைய திருமாலும் அறிவொண்ணாத பொற்பாத அன்பைப் பொருளெனக் காட்டி இவ்வையகம் பொலிவுற அடிமைசெய்த காரிய காரணங்கடந்த கருணைத் திருவுருவே! பொள்ளாத முழுமணி யொளியே! எனது மலவிருட் கேவலத்தைத் திருநோக்கால் நீக்கி, திருவடி சேரக் காட்டி, சகலத்திலே சுத்தப்படுத்தி, வழி மறித்தழைத்தாளும் திருவருளைப் பூசிப்ப நேச முற்றேனே; அவ்வன்பு அடியேற்குத் தகுமோ? எனதப்பனே! என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

வேலும் மயிலும்

திரு. சி. குமாரஸ்வாமி அவர்கள்,
176, மேட்டுத்தெரு, நத்தம் போஸ்டு,
செங்கல்பட்டு.

வேலும் மயிலும் கந்தவேளுக்கு அருகில் எப்போதும் இருப்பவை. காரணம், வேல் ஆறுமுகப்பெருமானின் ஆயுதம். மயில் அவ்வண்ணலின் ஊர்தி (வாகனம்). வேல், ஞான சக்தி. மயில் ப்ரணவஸ்வரூபம் என்பர்.

முருகனின் பக்தர்கள் எக்காரியத்தைத் தொடங்கினாலும், "வேலும் மயிலும் துணை" என்று சொல்லியோ அல்லது எழுதியோ தொடங்குவர். அருணகிரிநாத சுவாமிகள் அருளிய கந்தர் அநுபூதி முதல்பாட்டு "ஆடும்பரி, வேல்" என்று ஆரம்பிக்கிறது (ஆடும்பரி—மயில்). "மயிலையும் அவன் திருக்கை அயிலையும் (வேலையும்), அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்கவாருமே!" என மக்களை அன்புடன் கூவி அழைக்கிறார் அருணை முனிவர் (கடைக்கணியல் வகுப்பு). "பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும்", இது குமரகுருபர சுவாமிகள் அருள்வாக்கு (கந்தர்கலிவெண்பா).

வேல்வகுப்பு, மயில்வகுப்பு, வேல்விருத்தம்,மயில்விருத்தம், என்பனவும் அருணகிரியார் அருளியவையாகக் கருதப்படுகிறது. ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிய, "கந்தர்சஷ்டிக் கவச"த்தில் வேலும் மயிலும் நிறைய இடம் பெற்றுள்ளன.

ஸ்ரீமத் பாம்பன் குமரகுரு தாச சுவாமிகள், "ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை (மயில்) ஊர்தியோன் காக்க," "எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க," "ஞமலியம் பரியன் கைவேல்," என்று பாடிப் போற்றியுள்ளார். (சண்முகக் கவசம் பாட்டுகள் 6, 7, 16.)

கந்தரலங்காரம் 30-வது பாட்டு எவ்வளவு அழகாக நம்மை "வேலும் மயிலும்," என்று பன்முறை கூறித் துதித்திக்கும்படி தூண்டுகிறது! அன்பர்கள் இப்பாட்டை மட்டிலுமாவது பாரா யணம் செய்தல் நலம்:—

"பால் என்பது மொழி. பஞ்(சு) என்பது பதம். பாவையர் கண்
சேல் என்பதாகத்திரிகின்ற நீ, செந்திலோன் திருக்கை
வேல் என்கிலை, கொற்ற மயூரமென்கிலை, வெட்சித் தண்டைக்
கால் என்கிலை, மனமே! எங்ஙனே முத்தி காண்பதுவே."

(*க. அலங்காரம் 30.*)

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ சுவாமிநாததேசிகர் அவர்கள் திருச்செந்திலாண்டவனுக்குத் "திருச்செந்தில் கலம்பகம்" என்னும் பாமாலையைப் புனைந்து, அணிவித்துத் தொழுது மகிழ்ந்தார். அதைப் படிக்கும் நம்மையும் மகிழ்ந்து தொழச் செய்கிறார்!

"செந்தில் வேலாயுதக் கடவுளே! யான் (காலையில்) எழுந்திருக்கும் போதும், எழுந்த பின் சந்தோஷத்துடன் (உன்னைத்) துதிக்கும் போதும், அவ்வமயம் (அன்பினால்) உருகியழும் போதும், அடியேனது உடலானது (நாளெல்லாம் உழைத்து) அயர்ந்து (தூங்க) விழும் போதும் வேலும் மயிலும் என்பேன்" என்பது ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் அவர்களின் உருக்கமான துதியாகும். அத்துதிப் பாடல் இதோ:—

எழும்போதும் வேலுமயிலுமென்
பேனெழுந்தே மகிழ்ந்து
தொழும்போதும் வேலுமயிலுமென்
பேன்றொழுதே யுருகி
அழும்போதும் வேலுமயிலுமென்
பேனடியே னுடலம்
விழும்போதும் வேலுமயிலுமென்
பேன்செந்தில் வேலவனே.

(இப்பாட்டு, திருவாடுதுறை ஆதீனம் வெளியீடு எண் 129. செந்தில் கலம்பகம், பக்கம் 60ல் தனியாக (இப்பாட்டு மட்டும்) உள்ளது — ஸ்ரீ செந்திலாண்டவன் கும்பாபிஷேக மலராக

8-7-1959ல் ஸ்ரீ திருவாவடுதுறை குருமஹா சந்நிதானம் அவர்களால் வெளியிடப்பட்ட புத்தகம்.)

முருகன் என்றதுமே நம்முன் நிற்பவை வேலும் மயிலும். வேலுண்டு வினையில்லை. மயில் உண்டு பயமில்லை. குகனுண்டு குறையில்லை! ஆகவே நாம் யாவரும் தினமும் குறைந்தது ஆறு முறையாவது "வேலும் மயிலும் துணை" என்று சொல்லியபின் அல்லது ஒரு நோட்டில் எழுதியபின் நமது அன்றாட அலுவல்களைத் தொடங்கினால் நிச்சயம் வெற்றி கிட்டும்! எளியேனும், செந்தில் கலம்பகத்தில் உள்ள ஒரு பாட்டை அன்பர்களின் பாராயணத்துக்கு எழுதிவிட்டு, "வேலும் மயிலும் துணை", என்று முடித்துக் கொள்கிறேன்.

"வரங்கொண்ட உமைமுலைப்பால்
மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும்
பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறைஇறைஞ்சும்
சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும்என்றன்
கண்ணைவிட்டு நீங்காவே!".

(செந்தில்கலம்பகம், 20)

முருகா சரணம்!

பாம்பினும் கொடியவன்

திரு. ஜெ. மகாதேவன் அவர்கள்,
6வது சந்து, 8, சிங்காரத்தோட்டம்
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்றொரு பழமொழி உண்டு. பாம்புகள் பலவகை உள. அவற்றில் கொடிய விஷமுள்ளவை, விஷம் இல்லாதவை என இருவகைப் பிரிவு உண்டு. அழகாக படமெடுத்தாடுகின்ற நாகப் பாம்பிற்கு விஷம் இருக்கிறது. நீர் பாம்பிற்கு விஷம் இல்லை. இதனால் நீர் பாம்பு சுயேச்சையாக வெளியில் திரியும். ஆனால் நாகம் தன்னிடம் நஞ்சு இருப்பதை உணர்ந்து புற்றில் மறைந்து வாழும். நெஞ்சில் கரவுடையார் கொடிய அரவம்போன்று மறைந்து வாழ்வர் என்றும், மனதில் கரவில்லாதவர் நீர்பாம்பு போன்று சுதந்திரமாக மகிழ்ச்சியுடன் வாழ்வர் என்றும் ஔவைபிராட்டியார் கூறியிருக்கின்றார்.

அரவத்திற்கு பற்களில்தான் நஞ்சு உள்ளது. உடல் முழுவதும் இல்லை. ஆனால் சில மனிதர்கள் உடல்முழுவதும் விஷம் உடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்களால் வீட்டிற்கும், நாட்டிற்கும் ஏன்? உலகத்திற்கும் கேடு உண்டாகின்றது. அவர்கள் பாம்பினும் கொடியவர்கள் என்று துணிந்து கூறலாம். அவர்களுடைய தோற்றம் நாகத்தைப்போல் மினுமினுப்பாய் இருக்கும். குணமும் அரவத்தையே ஒக்கும். அப்படிப்பட்டவர்களிடம் நாம் எப்பொழுதும் விழிப்பாய் இருக்க வேண்டும். அவர்களிடம் நட்பும் கொள்ளக்கூடாது. அத் 'தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து நீங்குவதே நல்ல நெறி'.

ஒருகாலத்தில் நாகங்கள் எல்லாம் சேர்ந்து ஆலம் உண்ட

சிவபெருமானைக் கொல்லமுற்பட்டன. அப்பெருமான் அவற்றின் மீது கடைக்கண்ணால் அருள் சுரந்து, அவைகளை தனக்குரிய அணிகலன்களாக ஏற்றுக்கொண்டான். என்னே இறைவனின் பெருங்கருணை! இதனால் மணிவாசகர் ஈசனை 'அராப் பூண் பவனே' என்று அழைக்கிறார்.

அருள் நிறைந்த உள்ளம் கொண்ட பெரியோர்களுக்கு, இவ்வுலகின்கண் மக்கள் ஆற்றுகின்ற குற்றம் குறைகளை தாம் செய்வதாக பாவித்து கடவுளிடம் முறையிட்டு இரங்குவது வழக்கம். "குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்" என்கின்றார் பற்றற்ற அப்பரடிகள். அநுபூதி மானாகிய தாயுமானவர், "நாய்க்கும் கடையானேன் நாதாநின் இன்பமயம், வாய்க்கும்படி இனிஓர் மந்திரந்தான் இல்லையோ" என விம்முகிறார்.

மணிமொழியாரோ, "பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்" எனத் தம்மை இழித்துரைத்துக் கொள்கிறார். அருணகிரிநாதரோ ஒருபடி மேலேயே போய் விட்டார். அவர், பாவங்கள் என்னென்ன உளவோ அவற்றில் எல்லாம் ஈடுபாடு மிகுதி என்று கூறுவது போல் வெற்றிவேல் பெருமானிடம் பாடி புலம்புகிறார். அப்பாடல்,

"அவகுண விரகனை வேதாள ரூபனை
அசடனை மசடனை ஆசார ஈனனை
அகதியை மறவனை ஆதாளி வாயனை அஞ்சு பூதம்
அடைசிய சவடனை மோடாதி மோடனை
அழிகரு வழிவரு வீணாதி வீணனை
அழுகலை யவிசலை ஆறான வூணனை அன்பிலாத
கவடனை விகடனை நானா விகாரனை
வெகுளியை வெகுவித முதேவி மூடிய
கலியனை அலியனை ஆதேச வாழ்வனை வெம்பிவீழும்
களியனை யறிவுரை பேணாத மானுட
கசனியை அசனியை மாபாத னாகிய
கதியிலி தனையடி நாயேனை யாளுவது எந்தநாளோ',

இதுபோல் வடலூர் வள்ளலாராகிய இராமலிங்க அடிகளாரும், இப்புவியிற் மனிதராய் தோன்றி கொடிய பாம்பு போல்

உலவும் புல்லரைக் கண்டு நெஞ்சம் வெதும்பினர். அவர்களை திருத்தி, இறைவனின் அருளுக்கு பாத்திரமாகும்படி செய்ய திருவுளம் கொண்டார். அவர்களுள் தானும் ஒருவனாய் நின்று, பரம்பொருளின் பெருமையையும், தன்னுடைய (கயவர்களின்-பாம்பினும் கொடியாரின்) சிறுமையையும் கடவுளின்முன் விரித்துரைப்பார் ஆயினர்; "திருநீல கண்டனே, சச்சிதானந்த சபையில் உயிர்கள் உய்யும் பொருட்டு நடனம் ஆடுபவனே!

(தொடரும்)

அறிவிப்பு

ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயில்

நங்கநல்லூர் காலனி : : மதருஸ்-61

Souvenir 1967 — ஆண்டுமலர்.

எந்த சுபகாரியங்களையும் ஆரம்பிப்பதற்கு முன் அக்காரியங்கள், விக்னமில்லாமல் பூர்த்தியடைவதற்காக விநாயகப் பெருமானை பூசித்து இவர் அருளை அடைவது தொன்றுதொட்டு வந்த நம் முன்னோர்களின் வழக்கமாகும். இதை ஒட்டி, சென்னபட்டினத்தையடுத்த நங்கநல்லூரில் ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் ஒன்று கட்டுவித்து, ஷை ஆலயத்தில் மகா மண்டபம் அமைக்க, ஸ்ரீ கணேஷ் மண்டலியார் முன்வந்திருக்கிறார்கள். மேற்கண்ட இந்த ஆண்டு மலரில் விநாயகரைப் பற்றியுள்ள அரும்பெரும் விடயங்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாக எழுதியிருப்பதோடு முகப்பு அட்டையிலுள்ள விநாயகர் படம் மிக அழகாகவும் கண்கவர்வனப்போடும் அமைந்துள்ளது. மகாமண்டபத் திருப்பணிக்கு ரூ 1-00ம், அஞ்சல் செலவுக்கு ரூ. 0-50 ஆக ரூபாய் ஒன்றும் ஐம்பது பைசாவும் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பி 'ஆண்டு மலர்' ஒன்று பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்.

M. P. Srinivasan
'Parijatham'
4. First Main Road
N. C. B. S. Colony
Nanganallur
Madras—61

திருநணா / பவானியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி ரூ. 4000/-

திருப்புக்கொளியூர் அவிநாசி, திருமுருகன பூண்டி, திருநணா, திருச்செங்குன்றூர் திருவெஞ்சமாக்கூடல், திருப்பாண்டிக் கொடுமுடி, கருவூர் எனப்பெறும் கொங்கு நாட்டுப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்ருனதும், காவிரி பவானி அமுத நதி ஆகிய மூன்று ஆறுகளும் கூடுவதால் பவானிகூடல் எனப் பெறுவதும், தம்மை அடைந்தார்க்குத் தீவினை நண்ணுதலின் திருநணா என்று பெயர் பெற்றதும், தல விருக்ஷம் இலந்தையாதலின் வடமொழியாளரால் பதரிவனம் எனக் கூறப்பெறுவதும், திருஞானசம்பந்தரால் பதிகம் பெற்றதும், இறைவன் சங்கமேசுவரர் என்றும் திருநணாவுடையார் என்றும் இறைவி வேதநாயகி என்றும் பண்ணார் மொழியம்மை என்றும் வழங்கப் பெறுவதும், அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றதும் ஆன திருநணா எனப்பெறும் பவானிகூடல் என்னும் தலத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவர்களின் நினைவுநாளில் அந்தணர் அருந்தவர் ஏழைகளுக்கு அனனமளித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தரும நிதி நிறுவப் பெற்றது. இது "திருநணாவில்/பவானியில்/ ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி" எனப் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 4000/- ரூபா நான் காயிரம். இது ஆண்டொன்றுக்கு $5\frac{1}{2}$-% வட்டி தரக்கூடிய சென்னை அரசாங்க கடன் பத்திரங்களில் /Madras State Loan – 1978/ முதலீடு செய்யப்பெற்றுள்ளது. சர்க்கார் கடன் பத்திரம் எண் எம்எஸ். 572- ரூ. 1000/- எம்எஸ். 573- ரூ. 1000/- எம்எஸ். 574– ரூ. 1000/- எம்எஸ். 575– ரூ. 1000/- ஆக ரூ. 4000/- இது நம்மாலும் நமக்குப்பின உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெறும்.

3. நம்மால் மூலதனங்கள் நிறுவப்பெற்று, ஆண்டு தோறும்

இராமேசுவரம்	கன்னியாகுமரி	திருச்செந்தூர்
ஸ்ரீவைகுண்டம்	திருநெல்வேலி	பழையபாவநாசம்

திருக்குற்றாலம்	உத்தரகோசமங்கை	திருப்பெருந்துறை
திருப்பத்தூர்	மதுரை	பழனி
விராலிமலை	திருப்பாண்டிக்கொடுமுடி	திருவானைக்கா
திருவையாறு	சுவாமிமலை	திருவிடைமருதூர்
திருப்பனந்தாள்	வேதாரண்யம்	திருப்புகலூர்
திருவாரூர்	திருநாகைக்காரோணம்	திருநள்ளாறு
காவிரிப்பூம்பட்டினம்	ஆக்கூர்	மாயூரம்
வைத்தீசுவரன்கோவில்	சீர்காழி	ஆச்சாள்புரம்
சிதம்பரம்	திருப்பாதிரிப்புலியூர்	விருத்தாசலம்
திருக்கோவலூர்	திருவண்ணாமலை	திருமாகறல்
காஞ்சீபுரம்	திருக்கழுக்குன்றம்	சென்னை
திருவொற்றியூர்	வடதிருவாலங்காடு	திருத்தணிகை
காளஹஸ்தி	பிரயாகை	வாரணாசி
டில்லி	ஹரத்துவார்	ரிஷிகேசம்
திருக்கேதாரம்	ஆகிய 49 தலங்களில்	அன்னம்பாலிப்பு

நிகழ்த்துதல்போல இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையில் இத்தருமத்தை நடத்துதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சியுள்ள வட்டித்தொகை முழுவதும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிவப்பேறு எய்திய திருநாளாகிய வைகாசி அமரபக்ஷம் திருதியைநாளில் திருநணு எனப்பெறும் பவானி என்ற பாடல் பெற்ற திருத்தலத்தில் அந்தணர், அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம்பாலிக்கச் செலவிடப்பெறும்.

4. ஆண்டுதோறும் வரப்பெறும் வட்டி வரவுக் கேற்பவும் பொருள்களின் கால விலைக்கேற்பவும் நம்மால்தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம் பாலிப்பு நடத்தப்பெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற் பொருள் அரசினரால் திரும்பியளிக்கப் பெறின் மீண்டும் அதிக வட்டி வரும அரசியல் கடன்தாள்களிலோ நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெறும்.

Tirupanandal
Dated 22-6-1967 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office as No. 24 of 1967 of Book 4 volume 54 pages 33 to 35, dated 23-6-67